கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி



செபமாலை அன்னையின் அருள் பெறுவோம்

பக்கம் 03 அன்பில் நிலைத்திருங்கள்

பக்கம் 9 சிறுவர் தினம்

பக்கம் 13 அமைதியை நாடுவோம் அவனி...

(05.10.2014 - 05 ஐப்பசி, 2014 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 96 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014



## எமது தலைமை ஆயர் பேசுகிறார்

**அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே!**

உரோமையின் தூய பேதுரு பேராலய சதுக்கத்திற்குள் நுழையும் எவரும் பேராலயத்திற்கு முன் இருக்கும் பிரதான படிக்கட்டுக்களின் இருபுறமும் இருக்கும் இரு பெரும் சுரூபங்களை காணாதிருக்க முடியாது. இவற்றில் ஒன்று தம் வலதுகையில் சாவிக் கொத்துடனும், இடதுகையில் ஏட்டுச் சுருளுடனும் இருக்க, மற்றொன்று ஒரு வாளுடனும், ஏட்டுச்சுருளுடனும் காணப்படுகின்றன. இவை இயேசுவின் முதற் சீடரான புனித பேதுருவுடையவும், மற்றொன்று ஆண்டவரால் தொலைதூர நாடுகளுக்குத் தம் தூதுரையை எடுத்துச் செல்ல அழைக்கப்பட்டவரான புனித பவுலுடையதானதாகும். இருவருமே மறைசாட்சிகளாகவும், உரோமையில் அடக்கம் செய்யப்பட்டவர்களும் ஆவர். புனித பேதுரு வத்திக்கான் குன்றின் மீது சிலுவையில் அறையப்பட்டவரும், புனித பவுல் ஒஸ்டன்சியா என்ற நெடுஞ்சாலையில் சிரச்சேதம் செய்யப்பட்டவரும் ஆவர். திருச்சபையின் தூதுரையை தம் விசுவாசத்தால் போஷித்து வலுவூட்டிய திருத்தூதர்கள், மறைசாட்சிகள் மற்றும் புனிதர்கள் ஆகியோரை இவ்விருவரும் அடையாளப்படுத்துகின்றனர். பல நூற்றாண்டுகளாக தம் விசுவாசத்திற்கான வீரம் செறிந்த சான்று பகர்வோரான இவ்விரு மற்றும் ஆண்டவருக்கான சாட்சி பகர்ந்த சீடர்களின் விசுவாசத்தின் ஒட்டுமொத்த சேர்க்கையே திருச்சபையின் விசுவாசமாகும்.

இவர்களில் பலர் ஆண்டவருக்கு சாட்சி பகர்வதற்காக தம் இன்னுயிரையே ஈந்தவர்களாவர். இவர்கள் எவ்வளவு எண்ணற்றவர்களெனில் எம்மால் அவர்களை எண்ணக்கூட முடியாதிருக்கின்றது. எனவே நமது விசுவாசம் என்பது வெறுமனே சில இறையியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட கோட்பாடுகளின் திரட்டு மாத்திரமோ, கொள்கைகளோ மாத்திரமல்லாமல் ஆண்டவருக்கும் அவர் தம் அடியவர்களுக்கும் இடையிலேயான அன்பின் உறவின் பிறப்பும் நூற்றாண்டுக்கணக்காக அதற்கு தம்மை ஒப்புக் கொடுத்ததன் வெளிப்படுத்தலும் ஆகும்.

விசுவாசப் பிரமாணம் என்பது வெறும் மனப்பாடம் செய்யப்பட வேண்டிய உச்சரிப்பின் வாய்ப்பாடாக அல்லாமல் ஆண்டவருடன் மனிதர் எல்லாரும் கொள்ளும் உயிர்ப்பும் அன்பு உறவின் வெளிப்பாடுமாகும். இவை அன்பினதும் நம்பிக்கையினதும் ஒளியாகும். இறைமக்களாய் தேர்ந்து தெடுக்கப்பட்டவர்களின் குழுவாய் இம்மக்களே திருச்சபையாய் காணப்படுகின்றனர். இவர்களே அதன் அடையாளமாகவும், அதன் இலக்காகவும், பணியாகவும், பொது நம்பிக்கையாகவும் விளங்கி அது வாழ்வதற்கான காரணங்களுமாய் இருக்கின்றன. திருச்சபையானது மானிட இனத்தின் மீட்பிற்காக இறைவனால் தெரிவு செய்யப்பட்ட ஒரு கருவியாய் இருப்பதோடு அதன் உறுப்பினர்களும், புனிதர்களும், சாட்சிகளும் தம் விசுவாசத்தினால் மனுக்குலத்திற்கு சேவை புரிகின்றனர்.

எனவே தம் வினைத்திறமையால் சிறப்புப்பெற்ற இது நிர்வாக அமைப்போ வெறுமனே ஒரு நல்வாழ்வின் தத்துவமே நேரிய தன்மைக்கான ஒரு கேட்பாட்டு அமைப்போ அல்ல. இவற்றுடன் கூடிய மேலதிகமான ஒன்று வரலாற்றில் கிறிஸ்துவின் பிரசன்னத்தின் நீடிப்பே இது. இதனையே இரண்டாம் வத்திக்கான்

தொடர்ச்சி 8ம் பக்கம் ➥

# அங்கீகாரம் அளித்தார் திருத்தந்தை



இலங்கை திருச்சபையின் அப்போஸ்தலரான அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார், புனிதராக உயர்த்தப்படுவதற்கு ஆதரவாக கர்தினால்கள் மற்றும் ஆயர்கள் குழு வழங்கிய வாக்கெடுப்பை அங்கீகரித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

இந்தியாவின் கோவை மாநிலத்தில் 1651ஆம் ஆண்டு சித்திரை 21ஆம் திகதி பிறந்த அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் 1711ஆம் ஆண்டு தை 16ஆம் திகதி இலங்கையின் கண்டி பிரதேசத்தில் காலமானார். புனித பிலிப்நேரி தியான சம்பிரதாய சபையை உருவாக்கிய அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் தன் உயிரையே பணயம் வைத்து இலங்கையில் மறைப்பணி ஆற்றினார்.

ஒல்லாந்தரின் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் இன்று இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை உயிர்த்துடிப்புடன் இருக்கின்றது என்றால் அதற்கு அருளாளர் யோசேவ்வாஸ் முனியோரே காரணம் என்று அண்மையில் எமது பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறியதை நாம் மறந்துவிடாது பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்திற்காகவும், புனித பட்ட நிகழ்வுக்காகவும் தொடர்ந்து செபிப்போம். வருகிற தை மாதம் 14ந் திகதி இலங்கையில் திருத்தந்தையால் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரின் புனிதர் பட்டமளிப்பு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

## தனியார் பாடசாலைகளுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பற்றிய விபரம்.

விசுவாச உயிரூட்டல் தூதுப்பணியகத்தினூடாக பக்தி சபைகளுக்கிடையேயும், கத்தோலிக்க வர்த்தகர்களுக்கிடையேயும் இடம்பெற்ற இரு கூட்டங்களின் போது பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்ட விடயமாக தனியார் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான கருத்து முன்வைக்கப்பட்டது. இதன்படி அதில் சமூகமளித்திருந்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 2015ம் ஆண்டுக்காக தரம் 1ல் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தாரர்களின் விபரங்களை சேர்க்க முன்வந்துள்ளோம். ஆகவே விண்ணப்பத்தாரர்கள் பற்றிய விபரத்தை தந்துதவும்படி கேட்டுக் கொள்கின்றோம். ஆகவே இது பற்றிய விபரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**அருட்தந்தை உதயதாஸ் அடிகள்**
**புனித அன்னம்மாள் ஆலயம் வத்தளை**

## தேசிய பசிலிக்காவில் சிறப்புத் திருப்பலி

அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரின் புனிதர் பட்ட நிகழ்வுக்கு இன்னும் 100 நாட்களே இருக்கின்றது. இதை சிறப்பிக்கும் முகமாக இம்மாதம் 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தேவத்தை தேசிய பசிலிக்காவில் விசேட திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்க இருக்கிறது. ஆகவே அனைத்து குருக்களையும், துறவிகளையும், பொதுநிலை விசுவாசிகளையும் அழைக்கின்றோம்.

**அருட்தந்தை. சிறில் காமினி பர்னாந்து**
**சமூக தொடர்பாடல் இயக்குனர்**

தம்பி தங்கையே!
மலர் போன்ற தம்பி
தங்கையே!
மலர் உலகினில்
சிந்தனை நாம்
தம்பி தங்கையே!

மலர் போன்ற தம்பி
தங்கையே!
மலர் உலகினில்
கற்போம் நாம்
தம்பி தங்கையே!

தம்பி தங்கையே!
வடக்கில்
மலர்ந்தாலும்
தெற்கில்
மலர்ந்தாலும்
மலர் மலரே!



## குழந்தையின் உள்ளம் இறைவனின் இல்லம்

ஐப்பசி 01



வெண்நிறமானாலும்
மலர் மலரே!
செந்நிற மானாலும்
மலர் மலரே!
தம்பி தங்கையே!

**சர்வதேச சிறுவர் தினம்**

Please Like pope visit sri lanka official facebook page.
www.facebook.com/popevisitsrilanka2015 ■ www.popefrancissrilanka.com

"ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் குடும்பத்தாரே" (தி.பா 80)

# குறு நாடக செயலமர்வு – 2014/2015

## கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு

கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றின் பொற்காலத்திற்கு உரித்து கூறும் நாம், எமது பழைய இலக்கிய ஆக்கப்படைப்புகளை பாதுகாத்தல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ள வேண்டுமாயின் இலங்கையின் கிறிஸ்தவ கலையில் கிறிஸ்தவ அடையாளங்களை எமது பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தல் வேண்டும். நாட்டில் அனைத்து கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சபைகளின் பிள்ளைகளினதும், இளைஞர், யுவதிகளினதும் கிறிஸ்தவ இலக்கியம் தொடர்பான அறிவை மேம்படுத்தி, கிறிஸ்தவ இலக்கியத்தினதும், கலாச்சாரத்தின் பெறுமதிகளையும் அவர்களிடத்தில் பிரபல்யப்படுத்துவதன் ஊடாக சிறந்த பிரஜைகளை நாளைய தினத்தில் உருவாக்குதல் என்ற கொள்கையை முதன்மையாகக்கொண்டு, புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், 2014 / 2015 தேசிய கிறிஸ்தவ சாகித்திய விழாவிற்கு சமமாக "குறு நாடக செயலமர்வுகள்" ஒழுங்கமைக்கின்றது.

நாடகம் தொடர்பான செயலமர்வின் இறுதியில் பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளின் பொருட்டு குறுந் நாடகங்களை தயாரிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கி, பழைய கிறிஸ்தவ சம்பிரதாயங்களை எதிர்காலத்தை நோக்கி கொண்டுச் செல்கின்ற இளம் சமுதாயத்தினரை உருவாக்குதல் எமது நோக்கமாகும். நாடகவியல் தொடர்பான அறிவைக்கொண்டுள்ள கௌவர பாதிரியார்களால் வழிநடாத்தப்படும் குறித்த நாடக செயலமர்வுகளுக்காக இலங்கையில் கிறிஸ்தவ இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன....

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை, இலங்கை கொல்பிங் சபையின் தேசியத் தலைவர் திரு. எட்வட் குமாரகம (இடது) அருட்பணி. ஜோசப் ஈ பர்னாந்து அடிகளார் (ஜே.ச) தேசிய ஆன்மீகக் குருவானவர் (வலது) நிர்வாக செயலாளர் திரு. லூக் ஜோசப், இலங்கை கொல்பிங் சபையின் அட்டன் மாநில பிரதிநிதி திரு. எஸ் ஜேசாப் இவர்கள் இலங்கை கொல்பிங் சபையின் 30ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடுவது பற்றி மட்டக்களப்பு ஆயரை, ஆயர் இல்லத்தில் சந்தித்து உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

**தகவல் : டோசன் போல்**

## தெனியாய பங்கின் இளைஞர் யுவதிகளுக்கான செயலமர்வு

காலி மறைமாவட்டத்தின் தெனியாய பங்கின் இளைஞர் யுவதிகளுக்கான செயலமர்வு 2014.09.20 அன்று நடைபெற்றது. பங்கு தந்தை பீட் அடிகளாரின் ஆசீர்வாதத்துடனும், இளைஞர்களுக்கு பொறுப்பான அருட்தந்தை செபஸ்தியன் அடிகளாரின் வழிகாட்டலின் கிளரேஷியன் சபையை சேர்ந்த அருட்தந்தை தேவசீலன் அடிகளார் தலைமைத்தாங்கி நடத்தினர். அன்றையத் தினம் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வில் பங்கின் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியதோடு அவர்களின் வாழ்வில் வரும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது பற்றியும், அவ்வாறான சூழ்நிலைகளில் கிறிஸ்தவ விழுமியங்களைப் பின்பற்றி எவ்வாறு வாழ்வது என்பதனை பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

**தகவல் ஏ. எந்தனி**



## கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய மாணவர்களின் முதல் நன்மை



கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய மறைப்பாடசாலை தமிழ் மொழி கற்கும் பிள்ளைகள் முதல் முறையாக தேவநற்கருணை திருவருட்சாதனத்தை கடந்த 27.09.2014 அன்று காலை 7.30 மணித் திருப்பலியில் பெற்றுக்கொண்டனர். திருப்பலியானது அருட்தந்தை லுவிஸ் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் பங்குபற்றிய அனைவரையும் படத்தில் காணலாம்.

## அறிவித்தல்கள்

**கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியான வாழ்வு**

மட்டக்குளி புனித மரியாள் தேவாலயத்தில் இளைஞர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்படும் கருத்தரங்கு எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வடகொழும்பு இளைஞர் யுவதிகளுக்கான கத்தோலிக்கமும், தலைமைத்துவமும்**

என்ற விசேட கருத்தரங்கு ஹெரான புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை நடைபெறுகிறது.

தேவமாதாவின் சபையினரால் ஒழுங்கு செய்யப்படும் செபமாலை அன்னையின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 12.10.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு கொண்டாடப்படும். இதற்கான ஆயத்த வழிபாடுகள் 6.10.2014 திட்கட்கிழமை மாலை 6.30 மணிக்கும், 8.10.2014 மாலை 7.00 மணிக்கும் அருட்தந்தை அந்தனி பர்னாந்து (CMJ) அடிகளாரின் தலைமையில் விசேட வழிபாடு இடம்பெறும்.

**தகவல் : அருட்தந்தை ஒனாசியஸ்**

# பணிவாழ்வில் ஆண்டு ஐம்பது நிறைவு.

### "எளிமை நிலையே தன்னை ஏழைகளுடன் ஒன்றினைக்கும்"

என்பதனை தனது பிரதான தெரிவாகவும் உயிர் மூச்சாகவும் கொண்டவர்

## அருட்தந்தை றொனால்ட் டி சில்வா அவர்கள்



**ஆக்கம்: மேரி பிரியங்கா தவேந்திரம் LL.B,(Hons)**

மாறிவரும் உலகில் மாற்றத்தை காண விரும்பாது தான் கொண்ட இலட்சிய வேட்கையில் இன்றும் மாற்றம் காணாது நிற்கும் அருட்தந்தை றொனால்ட் டி சில்வா அவர்கள் தமது பணி வாழ்வின் 50வது ஆண்டை இவ்வருடம் இறையேசுவின் அருளுடன் பூர்த்தி செய்கின்றார்.

இவர் 10ம் திகதி ஐப்பசி மாதம் 1934ம் ஆண்டு தனது பெற்றோருக்கு ஆறு பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளையாக பிறந்தார். இவருடைய தந்தை சி.ஜே. சி.டி சில்வா இங்கிலாந்தில் பயின்ற, தகுதி பெற்ற தோல்வியாதி வைத்தியரும், செவாலியர் விருது பெற்றவருமாவார். மேலும் அவர் புறக்கணிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்ததுடன் அன்றைய கத்தோலிக்க ஒன்றியத்தின் செயலாளராகவும் பல வருடங்கள் பணியாற்றினார்.

இவருடைய தாய் செலினா லூயிசா பேர்னைஸ் டி சில்வா இலங்கையின் மிகச் சிறந்த கொடை வள்ளல் பட்டம் பெற்ற சேர்.சார்ல்ஸ் ஹென்றி டி சொய்சா அவர்களின் பேத்தியும், இவருடைய தந்தை இங்கிலாந்திடம் முதன்முதலில் தகுதி பெற்ற சிங்கள வைத்திய நிபுணர் ஆவார். இவர் பம்பலப்பட்டி புனித. வின்சட் டி போல் சபையின் தலைவியாகவும், ஏழைகள், முதியோரை பராமரிக்கும் பல உதவியமைப்புகளிலும் நீண்டகாலமாக பணியாற்றியுள்ளார். இவ்வாறிருந்தும், அருட்தந்தையின் பெற்றோர் விளம்பரத்தை விரும்பாது மிகவும் எளிமையாகவும் தம் வாழ்வை பொது வாழ்வில் ஈடுபடுத்தியவர்களாவார்கள். இவ்வாறான தந்தை மற்றும் தாயின் ஆழ்ந்த கருத்துக்களையும், சேவை உள்ளத்தினையும், பணி உணர்வையும் மனதில் நிறுத்தி, அதே பண்பில் சற்றும்கூட விலகாது "இவ் எளிமை நிலையே தன்னை ஏழைகளுடன் ஒன்றினைக்கும்" என்பதனை தனது பிரதான தெரிவாகவும் உயிர் மூச்சாகவும் கொண்டு 1956ம் ஆண்டு குருத்துவப் படிப்பிற்காக கண்டி தேசிய குருமடத்தில் சேர்ந்தார்.

பன்னிரெண்டு வருட காலமாக தெஹிவளை மற்றும் கல்கிசை பங்குகளில் தனது சேவையையாற்றிய பின்பு, தன்னை பங்குத் தந்தை பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறும், மற்றும் சிறிய புறக்கணிக்கப்பட்ட பங்குகளிற்கு அனுப்பி வைக்குமாறும் அதிமேதகு தோமஸ் கூரே ஆண்டகையிடம் கேட்டுக்கொண்டார். இதன் விளைவாக 1978ல் மிகவும் புறக்கணிக்கப்பட்ட பகுதியான மட்டக்குளிய சென்.மேரிஸ் ஆலயத்திற்கு பங்குத் தந்தையாக பணியேற்றார்.

அவ்வேளையில் மறைக்கல்வி வகுப்புக்கள் சிங்கள மொழி மாணவர்களுக்குகூட இருக்கவில்லை. எமது அருட்தந்தையின் அயராத முயற்சியினால் சில படித்த இளைஞர்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து தமிழ் மாணவர்களுக்கும் மறைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அருட்தந்தை மொழி வேறுபாடின்றி குறிப்பிடதக்க பலசேவைகளை தான் பணியாற்றிய பங்குகளில் செவ்வனே நிறைவேற்றிய பொழுதும், கொழும்பு - 15 வாழ் கத்தோலிக்க மக்களுக்கு அதிலும் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு ஆற்றிய பணி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது, அவ்வேளையில் திருப்பலி சிங்கள மொழியில் மட்டுமே நிறைவேற்றப்பட்ட பொழுது மிகப் பெருந்தொகையிலான தமிழ் மற்றும் ஆங்கில மொழிபேசும் மக்கள் பங்கிலிருந்தனர். அவர்களனைவரும் கொழும்பு - 13 மற்றும் 14றகே தமது மொழித் திருப்பலிகளுக்கு செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் அரசின் தனிச் சிங்கள கொள்கை அதற்கு காரணமாக அமைந்தது. இதன் மூலம் சகோதர இன மக்களது உரிமைகள் மறுக்கப்படுவதை அறிந்த அருட்தந்தை மிகவும் வருத்தப்பட்டதுடன், இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர துணிச்சலுடன் முன்வந்தார்.

அதனைத் தொடர்ந்து 1991ல் தனக்கான சீடத்துவ பணியினை தொடர்ந்து முன்னெடுக்கவும், தமிழ் கத்தோலிக்க மக்களது துயர் துடைக்கவும் "மோதர" பகுதியில் சிறிய ஒரு வழிபாட்டுக் கூடத்துடன் கூடிய வீட்டிற்கு இடம்பெயர்ந்தார். அங்குள்ள தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்காக இருமொழிகளிலும் வெள்ளிக் கிழமைகளில் நற்கருணை ஆசீர்வாதமும், சனிக்கிழமைகளில் ஞாயிறு திருப்பலியுமானது தமிழில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ்த் திருப்பலியாக...

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ஞானஒளி GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
05 ஐப்பசி மாதம், 2014 ஞாயிற்றுக்கிழமை.

## செபமாலை இயல்பில் தெளிவாக மாமரியை நோக்கிய செபமெனினும் சூழ்நிலையில் இது கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகும்.

தூய திருச்சபையானது இம்மாதத்தினை செபமாலை அன்னைக்கு அர்ப்பணித்துள்ளது. செபமாலை திருச்சபையின் வாழ்விலும் திருப்பணியாளர்களின் வாழ்விலும் நிறை வாழ்வை நோக்கிய பயணத்தில் வழித் துணையாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

செபமாலை முதலில் துறவிகளின் பக்தி முயற்சியாகத்தான் இருந்தது. துறவிகள் 150 திருப்பாடல்களையும் படித்துச் செபிக்கவேண்டும். படிக்கத் தெரியாதவர்கள் 150 முறை கர்த்தர் கற்பித்த செபத்தைச் சொல்ல வேண்டும். செபமாலை செபிக்கும் பழக்கத்தைப் புனித சுவாமிநாதர் 1220ம் ஆண்டில் தொடங்கினார். திருத்தந்தை 5ம் பத்திநாதர் 1571ம் ஆண்டு ஐப்பசிமாதம் 7ம் திகதியை செபமாலை அன்னையின் விழாவாக அறிவித்தார்.

செபமாலை பக்தியானது1716ம் ஆண்டு திருத்தந்தை 13ம் சிங்கராயரால் அறிவிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனவே ஐப்பசி மாதம் செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

செபமாலைப் பற்றி திருவிவிலியத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் உண்மையில் செபமாலை இயல்பில் தெளிவாக மாமரியை நோக்கிய செபமெனினும் சூழ்நிலையில் இது கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகும். நற்செய்தியின் அனைத்துக் கருத்துக்களையும் கொண்ட செபமாலையை நற்செய்தியின் சுருக்கம் என்று கூடக் கூறலாம். மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் மரியன்னை மீது ஆழ்ந்த பக்தியுடையவர். இவர் **"மரியன்னையின் திருத்தந்தை"** என்று அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இம்மாதத்தில் குழந்தைகளும், முதியோர்களும் நினைவுக் கூரப்படுகிறார்கள். குழந்தைகள் கடவுளுக்கு சமமானவர்கள் என்று கூறுவார்கள். ஏனென்றால் அவர்கள் உள்ளம் கள்ளங்கபடற்றது. இவர்கள் நாளைய உலகின் தலைவர்கள். ஆனால் இவர்களுக்கு உலகை முதலில் காட்டியவர்களும், வாழ வழிகாட்டியவர்களும் இவர்களது பெற்றோர்களும் முதியோர்களுமேயாவார்கள். ஆனால் இவர்களில் பலர் இவர்கள் நன்றாகி உருவாகி சமுதாயத்தில் பேர் சொல்லும் அளவிற்கு வந்ததும் வளர்த்தவர்களையும் உருவாக்கியவர்களையும் மறந்து போய்விடுவதும், மதிக்கத் தவறுவதும், அவமதித்து கதைப்பதும் மிகவும் வருத்தத்திற்கும் வேதனைக்குரிய விடயமாகும்.

உயரச் செல்வதற்கு உதவியாக இருந்த ஏணியை எட்டி உதைப்பது போலாகும். இதற்கு நல்ல உதாரணங்களாக இருப்பதுதான் இன்றைய வயோதிப மடங்கள். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல நாளைய வயோதிபர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் எதை விதைக்கின்றோமோ அதைத்தான் அறுவடைசெய்வோம்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

## பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான விஜயத்தின் தொணிப்பொருள்



# அன்பில் நிலைத்திருங்கள்

**(யோவான் 15:9)**

**பரிசுத்த திருத்தந்தை தை –2015, இலங்கைக்கு வருகின்ற 3வது திருத்தந்தையாகும். "அன்பில் நிலைத்திருங்கள்"** என்பது பரிசுத்த திருத்தந்தை அவர்களின் இலங்கை நாட்டு விஜயத்தின் தொணிப்பொருளாகும். வருகின்ற தை மாதம் 13–15ஆம் திகதி வரை எமது நாட்டில் திருத்தந்தை இருப்பார்.

"அன்பில் நிலைத்திருங்கள்" எனும் தொணிப்பொருளின் அடித்தளமாகக் காணப்படுவது பரிசுத்த வேதாகமத்தில் புனித யோவான் நற்செய்தியின் 15 : 9 ஆம் வசனமாகும். "என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் **அன்பில் நிலைத்திருங்கள்"**

உண்மையான அன்பு என்றால் என்ன? பலரால் வினவப்படும் இந்த வினாவுக்கு பரிசுத்த வேதாகமத்தில் புனித யோவான் எழுதிய முதல் திருமுகம், மிகவும் குறுகிய ஆழமானதோர் விடையை அளிக்கின்றது. "கடவுள் அன்பாயிருக்கிறார்" (4 : 8) அன்பின் அடிப்படையும், அன்பின் பூரணத் தரமும், அன்பு செய்வதற்கு எம்மை உற்சாகப்படுத்துபவரும், அன்பு செய்வதற்கு எமக்கு ஆணையிடுபவரும் அவரேயாவார்.

கடவுளின் அன்பானது உலகின் மீட்பராக இயேசு நாதரை இவ்வுலகிற்கு அனுப்பியதன் மூலமே பூரணமாக வெளிப்பட்டது. இயேசு நாதர் தேவ மகனாவதால், அவருக்கும், பிதாவாகிய சர்வேசுரனுக்கும் இடையே ஈடிணையற்ற உறவொன்று உள்ளது. ஆதலால், அவர் மீட்பின் மத்தியஸ்தராகவும், எம்மத்தியில் வீற்றிருக்கும் பரம இரகசியமும், அன்பின் பூரணத்தன்மையுமாவார்.

அன்பினில் வாழ்வோர் இறைவனுக்குள் வாழ்வோராவர். கடவுளுடன் இணைந்து வாழுதல், பிறருக்கு அன்பு செய்தல் ஆகிய இரண்டும், ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்த முடியாதவையாகும். பூரணமான அன்பின் உருவம் முக்கோண வடிவமாகும். அதன் மூன்று கோணங்களாவன இறைவனும், நானும், எனது சகோதரனுமாவோம். முக்கோணியின் ஒரு கோணமாவது குறைவடையும் போது அன்பு பூரணமற்றதாகவும், முதிர்ச்சியடையாததாகவும் மாறிவிடும். மூன்று கோணங்களும் பூரணமாகும் போது அன்பும் பூரணமாகும்.

கிறிஸ்து நாதர் வாழ்ந்து காட்டிய தேவ அன்பின் பூரணத்தன்மையை தமக்கு பின் மானிட வர்க்கத்திற்கு கொண்டு செல்வதற்கு அப்போஸ்தலர்கள் பன்னிருவரை தெரிந்துக் கொண்டு, அவர்களுக்கு புதிய கட்டளையொன்றை வழங்கினார். "நான் உங்களை அன்பு செய்வது போல நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்". இந்த அப்போஸ்தலர்களும், ஏனைய கிறிஸ்துவைப் பின்பற்றுவோரும் தமது வாழ்வினைத் தியாகம் செய்வதன் மூலம் இக்கட்டளையை கடைப்பிடித்துள்ளனர்.

அவ்வன்பின் கட்டளையை உலகெங்கிலும் பறைசாற்றிட மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும் கத்தோலிக்கத் திருச்சபையின் தற்போதைய தலைவரான மேய்ப்பராம் அதி உன்னத பரிசுத்த பாப்பரசர் ஆவார்.

அன்று கிறிஸ்து நாதர் தமது அப்போஸ்தலர்களுக்கு கூறியது போல இன்று அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் பரிசுத்த பாப்பரசரும் எம் அனைவருக்கும் **"அன்பில் நிலைத்திருங்கள்"** என்றே கூறுகின்றார்.

**இவர் ஏழைகளின் பங்காளன் இயேசுவைப் போல் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, ஏழைகளுக்கு, நோயாளிகளுக்குப் பணிபுரிகின்றார். ஏழைகளின் முகத்தில் இறைவனைப் பார்ப்பவர். இவரின் பாதையில் நாம் நடந்தால் தவறுகளை இழைக்க முடியாது**

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# தினந்தோறும் செபமாலை செபியுங்கள்



ஐப்பசி மாதம் செபமாலை மாதம். செபமாலை என்பது ஒரு குட்டி விவிலியம் அல்லது விவிலியத்தின் சுருக்கம் என்று சொல்வார்கள். செபமாலை செபிப்பது என்பது இயேசு கிறிஸ்துவினுடைய மறையுண்மைகளைத் தியானிப்பது. கடவுள் மீது நமக்குள்ள விசுவாசத்தைப் புதுப்பிப்பதும், கிறிஸ்துவின் மீது அன்பு செலுத்துவதும், அன்னை மரியாள் மீது அளவுகடந்த பாசத்தை வெளிப்படுத்துவதுமாகும். இதன் வழியாக மீட்பு வரலாற்றில் நாம் பங்கெடுக்கின்றோம்.

கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி என்ற ஏட்டில் 971, 2678, 2708 ஆகிய எண்கள் மரியன்னைப் பற்றிய படிப்பினைகளை நாம் பின்பற்ற நமக்கு படிப்பிக்கின்றது. இவ்வெண்கள் அன்னை மரியாவின் மீதுள்ள பக்தியையும், அதனால் வரும் பலன்களையும், நமக்கு போதிக்கின்றன. "எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுடையாள் என்றிடுமே" (லூக் 1:48) என்ற மரியாளின் பாடலே மிகப் பெரிய சாட்சியாகும். காரணம் அன்னை மரியாள் இறைவனை நம்பினார். இறைசித்தத்திற்கு கீழ்ப்படிந்தார். தன்னையே தாழ்த்திக் கொண்டார். அதனாலே கடவுள் அவரை எவ்வுயிர்க்கும் மேலாக உயர்த்தினார். எனவே அவர் மகிமையின் உச்சத்திற்கு உயர்த்தப்பெற்றார்.

ஒரு பெரியவர் இருந்தார். அவர் அதிகம் படிக்காதவர். அதிக நேரம் வீட்டிலும், ஆலயத்திலும் செபிப்பவர். அவர் செய்கின்ற ஒரே செபம் செபமாலை சொல்வது தான்.

✠ செபமாலையை வேகமாகச் சொல்லக் கூடாது

✠ கடமைக்குச் சொல்லக்கூடாது

மாறாக நிறுத்தி, பொருளுணர்ந்து சொல்ல வேண்டும். அப்போதுதான் அதற்கு நிறைந்த பலன் கிடைக்கும் என்று அடிக்கடி தன் நண்பர்களிடம் கூறுவார். அவர் வாழ்வில் சந்தித்த அனைத்து துன்பங்களையும், எதிர்கொள்ள சக்தியாகவும், துணையாகவும் இருந்தது இந்த செபமாலைதான் என்று கூறி பலரையும் செபிக்கத் தூண்டுவார்.

செபமாலை சொல்வது எளிதானது. இனிதானது சக்தி வாய்ந்தது என்பதுதான் இவரது விசுவாச அனுபவம். கத்தோலிக்க விசுவாசம் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையோடு சேர்ந்து....

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஆசிரியர் தினம்

ஐப்பசி 06



## "ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணராத ஒரு தேசம் எதிர்காலத்தைப் பற்றிய எதிர்நோக்கு அற்றது"

ஆசிரியர்களின் தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த மாத்திலே அவர்கள் செய்யும் அளப்பரிய சேவையையும், தொண்டையும் நினைவுக் கூற வேண்டியது நமது கடமை. இந்த கட்டுரையை நீங்கள் வாசித்து கொண்டிருக்கின்றீர்கள் என்றால் அது உங்கள் ஆசிரியரின் உழைப்பாலும், சேவையாலும் தான். நம்மில் பலருக்கு ஆசிரியர்கள் கடவுள்களாக இருந்து நமது எதிர்காலத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். பிஞ்சு விரல்களைப் பிடித்து "அ" கரம் முதல் "ன"கரம் வரை எழுதப் பழக்கியவர்கள் நமது ஆசிரியர்கள். நமது எதிர்காலத்தையும், வாழ்விற்கான பாதையையும், சீரமைத்துக் கொடுத்தவர்கள் நம் ஒவ்வொருவரின் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் நமது சிந்தனைக்கு ஒளி விளக்கு, நமது வாழ்வுக்கு வழிகாட்டி, நமது பயணத்திலே உடன்பயணித்து பலனை எதிர்பார்க்காது நமக்காய் பாடுபட்டவர்கள். பாடுபடுபவர்கள். பகலவனைப்போல் பரந்து வளர்ந்தாலும், மாணவ மாணவியர் மனதைத் தொடுகின்ற மகத்தான தொழில்நுட்பம் ஆசிரியர் பணி. இவ்வகையான ஆசிரியர்களை நாம் விவிலியத்தில் பார்க்கலாம். இவற்றில் ஒன்றைப் பார்ப்போம்.

### ஏலியும் சாமுவேலும் (1சாமு 3:1–21)

ஆசிரியர் தன் எண்ணங்களை மாணவர்கள் மீது புகுத்தாமல் அவர்கள் சிந்தனைகளைத் தூண்ட மனித நேயத்தோடு கற்பிக்க வேண்டும். சாமுவேல் மற்றும் ஏலியின் சம்பவம். இச்சம்பவத்தை வாசியுங்கள். இந்நிகழ்விலிருந்து கற்க வேண்டிய பாடங்கள் பல உள்ளன. சாமுவேலின் ஆசிரியராகத் திகழுகின்ற ஏலி ஆசிரியர்களுக்குக் கற்றுத் தரும், பாடம் மிக முக்கியமானது. தன் மாணவன் கடவுளால் அழைக்கப்படுகின்றான் என்பதை உணர்ந்தும், அவனை அந்த அழைத்தலுக்கு ஏற்ப தயார்படுத்துகின்றார். அவனுடைய பதில் மொழி எவ்வாறு என்னவாக இருக்கவேண்டும் என தெளிவாக கூறுகின்றார். தனக்கு கடவுளின் அழைப்பு கிடைக்கவில்லை என்றாலும், தன் மாணவனுக்கு கிடைத்ததை நினைத்து அதன் மூலம் கடவுள் தரும் செய்தியைப் பெறுகின்றார். சுயநலமோ, தலைக்கனமோ இல்லாத தனது அனுபவத்திற்கும், அறிவிற்கும், ஈடில்லாத தன் மாணவனை அவனுடைய எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டி ஆண்டவரின் அழைத்தலை உணரச் செய்கின்றார் ஏலி

### இன்றைய ஆசிரியர்களுக்கு ஏலி தருகின்ற படிப்பினை:

- தன்னுடைய மாணவர்களை மட்டம் தட்டி பார்க்கும் ஆசிரியர்கள்
- தனது சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு மாணவர்களை கையாளும் ஆசிரியர்கள்
- தனக்கு தெரியாதவைகளை மாணவர் தெரிந்து வைத்திருந்தால் அதை ஏற்காத ஆசிரியர்கள்

இவர்களுக்கு ஏலி சவாலாக இருக்கின்றார். இன்றைய ஆசிரியர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவச் செல்வங்களை அவர்களின் திறன் கண்டறிந்து மேன்மையுறச் செய்வது தான் அவர்களது மேலான கடமை. அதைத்தான்ஏலியும் தன் மாணவன் சாமுவேலுக்குச் செய்தார். அதனால்தான் கடவுள் தந்த செய்தியை அவர் பெற்றார்.

### மாணவர்களே சாமுவேலின் வாழ்விலிருந்து உங்களுக்கு

தான் யாரால் அழைக்கப்படுகின்றோம் என்பதை அறியாதிருக்கும்போது தனது வழிகாட்டியும், ஆசிரியருமான ஏலியிடம் சென்று பணிவோடு தன்னை ஒப்புவிக்கின்றார். இந்த பணிவும், ஆசிரியரை மதிக்கும் குணமும் ஆசிரியரை நாடிச் செல்லும் குணமும் இன்று மாணவர்களுக்கு இருக்கவேண்டிய பண்பாகும்.

அடுத்து மாணவர்களாகிய உங்களுக்கு மிகவும் தேவையானதொன்றாக இருப்பது கீழ்ப்படிதல். கீழ்ப்படிதல் இருக்கும்போது நாம் மேலோங்கி வளர்கிறோம். எனவே ஏலி என்ற ஆசிரியரிடமிருந்து தனது மாணவர்கள் சுய மரியாதையோடும், கடவுள் பக்தியோடும், வளர்க்கின்ற பண்பை ஆசிரியர்களும் சாமுவேல் என்னும் மாணவரிடமிருந்து கீழ்ப்படிதல் எனும் மாபெரும் கொடையையும் மாணவ மாணவியர் சமுதாயம் பெற்றிட வேண்டும்.

**இந்த உலகில் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம், அறிவு. அந்த அறிவை முழுமையாகக் கொடுக்கும் ஆற்றல் ஆசிரியர்களால் மட்டுமே முடியும். – அரிஸ்டாட்டில்**

மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனக் குறைவாக இருக்கும்போது பாடங்களை கற்காது இருக்கும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தண்டிக்கிறார்கள். இதை ஏற்றுக்கொள்ளாத இன்றைய மாணவர்களும் சரி, பெற்றோர்களும் சரி ஆசிரியர்களை தண்டிக்க முற்படுகின்றார்கள். அல்லாது போனால் தரம் கெட்ட வார்த்தைகளால் அவமானப்படுத்துகிறார்கள். ஆனால் மாணவர்களே பெற்றோர்களே கவனியுங்கள்

பாறைமீது ஒவ்வொரு அடியும் விழவிழத்தான் அது அழகிய சிற்பமாக மாறுகின்றது. பாறையாய் இருக்கும் மாணவர்களைக் கூட அடியால் செதுக்கியதால் தான் நாம் இன்று அழகான சிலைகளாக சமுதாயத்தில் வலம் வருகின்றோம். ஆசிரியர் தம் வாழ்வில் கொண்டிருந்த அக்கறையினால் கொடுத்த அடிகளை பாறையின் மீது பட்ட சிறு அடிபோல் ஏற்று நாம் நம்முடைய வாழ்வினால் பிறரை உயர்த்துவோம்.

### ஏற்றிடும் ஒளியாக....

ஒரு முறை ஒரு சிறுவன் தெருவில் ஏணி, தோனி, வாத்தியார் என்று கத்திக்கொண்டே சென்றான். இதைக் கண்ட அவனுடைய நண்பன் ஏன்டா இப்படிக் கத்துற? என்று கேட்டான். அதற்கு கத்திக்கொண்டே வந்தவன் இந்த மூன்றுமே ஒன்றுதான் என்று கூற நண்பனோ விழித்தான். கத்திக்கொண்டு வந்தவனோ கூறினான் ஏணி, தோனி, வாத்தியார் இவை மூன்றுமே தன்னை நம்பி வந்தவர்களை வாழ்வில் உயர்த்திவிட்டு தான் இருந்த இடத்திலேயே இருக்குமாம். ஆம் ஆசிரியர் பணியும், மருத்துவப் பணியும், குருத்துவப் பணியும், பணத்திற்காக செய்வதை விட மனிதத்திற்காக செய்வதினால் மட்டும்தான் அதை முழுவதுமாகவும், நிறைவாகவும் செய்ய முடிகிறது.

### சிந்தனைக்கு

ஏழாம் வகுப்பு மாணவன் தன்னுடைய ஆசிரியரைக் கொன்ற நிகழ்வை நாம் பத்திரிகையில் வாசித்திருக்கின்றோம். கேட்டும் இருக்கின்றோம். இந்நிகழ்வுக்குப் பின் அவ்வாசிரியரின் பிள்ளை கூறிய வார்த்தைகள் "நாங்க விடுதியில் இருந்ததால் வாரத்துக்கு ஒரு முறைதான் அம்மாவைப் பார்க்க முடிந்தது. ஆனா உங்ககூடத்தான் நிறைய நேரம் எங்க அம்மா செலவழிச்சாங்க. அவுங்களை கொல்ல எப்படி மனசு வந்திச்சு" என்ற வார்த்தைகள் பலரின் மனதையும் தாக்கியது.

நம்முடைய வாழ்வின் தரத்தை உயர்த்துகிற ஒவ்வொரு ஆசிரியரும் நாம் காணும் கடவுள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் கடவுளிடம் மட்டும்தான் பிறரின் உயர்வுக்காக தன்னையே தாழ்த்திக் கொள்ளும் பண்பு உள்ளது. அப்பண்பையே ஆபரணமாகக் கொண்டுள்ள நம் ஆசிரியர்களிடமிருந்து நாம் கற்றதைக் கற்பித்து ஆசிரியப் பணியை அறப்பணியாக மாற்றுவோம்.

**அனைத்து ஆசிரியருக்கும், ஆசிரியர் தின வாழ்த்துக்கள். இறை ஆசீர் உங்களோடு என்றும்**



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

# அருளடையாளங்கள் ஓர் அலசல் 09




# புதிய ஏற்பாட்டில் தூய ஆவியார்

## தூய ஆவியும் திருமுழுக்கு யோவானும்

புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு யோவானின் பிறப்பைப் பற்றிய அறிவிப்பில் தான் முதன்முதலாக வருகிறது. புதிய ஏற்பாட்டில் 'ப்னெயுமா' (Pneuma) என்ற கிரேக்கச் சொல்லே பயன்படுத்தப்படுகிறது. "அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் தூ-யப் பீடத்தின் வலப்பக்கத்தில் நின்றவாறு அவருக்குத் தோன்றினார். அவரைக் கண்டு செக்கரியா அச்ச-முற்றுக் கலங்கினார். வானதூதர் அவரை நோக்கி "செக்கரியா அஞ்சாதீர், உமது மன்றாட்டுக் கேட்கப்-பட்டது. உம் மனைவி எலிசபெத் உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அதற்கு யோவான் என்று பெயரிடுவீர்... தாய் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார்" (லூக் 1:11-15) "மரியாளின் வாழ்த்தை எலிசபெத் கேட்டபோது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்" (லூக் 1:41)

திருமுழுக்கு யோவான் மட்டுமல்ல அவரது பெற்றோரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுகின்றனர். ஆண்டவருடைய தாய் மரியா எலிசபெத்தை வாழ்த்திய பொழுது, தன் வயிற்றினுள்ளே குழந்தை அக்களிப்பால் துள்ளியதை தெரியப்படுத்துகின்றார். இதை ஒரு தாயினால் தான் அனுபவிக்க முடியும். திருமுழுக்கு யோவான் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுவார் என்று செக்கரியாவுக்குத்தான் ஆண்டவரின் தூதர் அறிவித்தது. அதனை அனுபவித்தவர் எலிசபெத். எனவே தான் சாட்சியம் பகர்கின்றார். பிறக்கப் போகும் குழந்தையானது எலியாவாக நிறைவேற்றப் -போகும் பாங்கினை செக்கரியா தனது பாடலில் வெளிப்படுத்துகின்றார். திருமுழுக்கு யோவானைப் பற்றி ஆண்டவரின் தூதர் பின்வருமாறு சொல்வார். "எலியாவின் உளப்பாங்கையும், வல்லமையையும் உடையவராய் அவருக்கு (இயேசு) முன் செல்வார்... இவ்வாறு ஆண்டவருக்கு ஏற்புடைய ஓர் மக்களினத்தை ஆயத்தம் செய்வார்" செக்கரியா இதனையே இறைவாக்காக வெளிப்படுத்துகின்றார். "குழந்தாய் நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய்" (லூக் 1:76-77)

எலியாவின் மனநிலையில் மெசியாவை அறிவித்துச் சுட்டிக்காட்ட வேண்டியவர், இறைவனது ஆவியினால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவதைக் காண்கின்றோம். பாலைநிலத்தில் திருமுழுக்கு யோவான் வாழ்ந்து கொண்டிருக்கும்போது கடவுளின் வாக்கைப் பெற்றவராக "பாவமன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்கு பெறுங்கள்" என்று யோவான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று அவர் பறைசாற்றி வந்தார். (திருமுழுக்கு யோவானின் போதனையை திருவிவிலியத்தில் வாசிக்கவும். லூக் 3:3-14) திருமுழுக்கு யோவானின் போதனையைக் கேட்டு "யூதேயாவினர் அனைவரும், எருசலேம் நகரினர் யாவரும் அவரிடம் சென்றனர். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் திருமுழுக்குப் பெற்று வந்தனர்" (மாற் 1:4-5) திருமுழுக்கு யோவானில் செயலாற்றிய இறைவாக்கின் ஆவியானவர் ஆண்டவருடைய ஆவி என்பதை மக்கள் இனங்கண்டார்கள். எனவே தான் மக்கள் திரளாய் அவரிடம் சென்றார்கள்.

## இயேசுவின் வாழ்வில் தூய ஆவி

### (அ) பிறப்பில்

"வானதூதர் மரியாளிடம் தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்" (லூக் 1:35) இறைமகன் இயேசு கன்னிமரியின் வயிற்றில் உடலெடுப்பது தூய ஆவியின் வல்லமையால்

### (ஆ) வளர்ச்சியில்

கன்னிமரியின் உதரத்தில் கருவெடுத்த இயேசு அறிவிலும், ஞானத்திலும் வளர்ந்தார். முதிர்ச்சி-யடைந்தார். 12 வயதில் எருசலேம் ஆலயத்தில் மறைபோதகர்கள் மத்தியில் இறை வார்த்தையை போதித்தார். போதகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளித்த விதமும் அவர்களை கேள்வி கேட்ட விதமும் கூடியிருந்தோரை வியப்பில் ஆழ்த்தியது. அனைவரும் அவரது அறிவுத்திறனைக் கண்டு வியந்தனர். "இயேசு வளர வளர ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதர்க்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:52)

### (இ) திருமுழுக்கில்

இயேசு திருமுழுக்கு பெற்ற பொழுது தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட செய்தியினை நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகின்றனர்.

★ "... தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார்" (மாற் 1:10)

★ "... கடவுளின் ஆவி, புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார்" (மத் 3:16)

★ "தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது" (லூக் 3:22)

★ "தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது: 'தூய ஆவி புறாவைப் போல வானத்திலிருந்து இறங்கி இவர்மீது இருந்ததைக் கண்டேன்...' தூய ஆவி இறங்கி யார் மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர்" (யோவா 1:32-33)

தமது திருமுழுக்கில் இயேசு இறைமகனா-னகவும், கிறிஸ்துவாகவும் இருக்கத் தொடங்கவில்லை. அவர் எப்போதுமே இறை மகனான இருந்தார். திருமுழுக்கில் தூய ஆவி அவர்மீது இறங்கியது மெசியா தன்மையின் அடையாளம் ஆகும். அவர் மெசியாவாக இருப்பதற்கு ஆவியினால் அருட்பொழிவு செய்யப்படுகிறார்.

### (ஈ) சோதனையில்

"... பின்னர் அவர் அதே ஆவியால் பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டா. அவர் நாற்பது நாட்கள் அலகையினால் சோதிக்கப்பட்டார்" (லூக் 4:1-2) இயேசுவை பாலைநிலத்திற்கு இட்டுச் சென்ற கடவுளின் ஆவியானவர் அவரது ஆற்றலையும், உறுதியையும் அலகை சோதிக்க அனுமதித்தார். இறையரசுப் பணி செய்ய புறப்பட்ட இயேசுவின் உறுதிப்பாட்டை அலகை சோதித்தபோதும் இயேசு வெற்றி பெற்றார். இது இயேசு மேற்கொள்ளவிருக்கும் போராட்டத்தின் வெற்றியை இனங்காட்டுகின்றது.

### (உ) நற்செய்திப் பணியில்

இயேசு தனது பகிரங்கப் பணியினை ஆரம்பிக்கும்போது ஆவியின் பிரசன்னத்தை மீண்டும் ஏற்றுக்கொள்கின்றார். "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது" (லூக் 4:18) என்று கூறிய இயேசு, தனது பணிதனை கோடிட்டுக் காட்டுகின்றார். இயேசுவின் பணிகளால் நோயாளர்கள் குணமடைந்தனர். பேய்கள் வெளியேறின, ஒடுக்கப்பட்டோர் உரிமை வாழ்வைப் பெற்றனர், பார்வையற்றோர் பார்வை பெற்றனர். புதிய மனுக்குலத்தை படைக்க ஆவியால் தூண்டப்படுகின்றார். கொர்னேலியுவின் இல்லத்தில் உரையாற்றிய பேதுரு பின்வருமாறு கூறுவார் "கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை



செய்து கொண்டே சென்றார்" (தி.ப 10:38)

இயேசு தனது போதனையின் போது பல சந்தர்ப்பங்களிலே தூய ஆவியானவரைப் பற்றி பேசுகின்றார்.

★ "விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போர்க்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துனை உறுதி" (லூக் 11:18)

★ "... ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல மாறாக உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய் பேசுவார்" (லூக் 10:20)

★ "என் பெயரால் தந்தை அனுப்பப்போகின்ற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்" (யோவா 14:26)

### (ஊ) இறப்பிலும், உயிர்ப்பிலும்

இயேசுவின் இறப்பும், உயிர்ப்பும் தூய ஆவியாரின் வல்லமையால் இடம்பெற்றதாகும். இயேசு சிலுவையில் தொங்கிய பொழுது "என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறினார். ஆனால் பிறகு "தந்தையே உம் கைரங்களில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்" என்று கூறி தம்முயிரைக் கையளிக்க திடத்தை வல்லமையை அளித்தவரும் தூய ஆவியார் தாமே" ஆனால் கிறிஸ்துவின் இரத்தம், வாழும் கடவுளுக்கு நாம் வழிபாடு செய்யுமாறு, சாவுக்கு அழைத்துச் செல்லும் செயல்களிலிருந்து நம் மனச்சான்றை எத்துணை மிகுமியாய்த் தூய்மைப்படுத்துகிறது! ஏனெனில், என்றுமுள்ள தூய ஆவியினால் தம்மைத் தாமே கடவுளுக்கு மாசற்ற பலியாகக் கொடுத்தவர் அவரே" (எபி 9:14)

இயேசுவின் பிறப்பிலும், இறப்பிலும் செயலா-ற்றிய இவ் ஆவியாரே உயிர்ப்பிலும் பங்கேற்கின்றார். இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததும் தூய ஆவியின் வல்லமையினால் தான். "மேலும் இறந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே உங்களுள் குடிகொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர் பெறச் செய்வார்" (உரோ 8:11)

### (எ) துணையாளரை அனுப்புவேன்

இயேசு தனது பணிவாழ்வின் போது தன்னோடு செயலாற்றிய தூய ஆவியாரைத் தருவேன் என்று வாக்களித்தார். "இதைச் சொன்னபின், அவர் அவர்கள்மேல் ஊதி, தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்..." என்றார் (யோவா 20:22) தாம் விண்ணேற்றமடையும் முன் "இயேசு தாம் தெரிந்து கொண்ட திருத்தூதர்களுக்கு அவர்கள் தூய ஆவியின் துணையோடு செய்ய வேண்டியவற்றைக் குறித்து அறிவுறுத்திய பின் விண்ணேற்றமடைந்தார்" (தி.ப 1:1-2)

தொடரும்...




## வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி

### 9. பாவத்தை பொறுத்துக் கொள்ள திருச்சபைக்குள்ள அதிகாரம்

1. எப்பேர்ப்பட்ட கனமான பாவங்களை மனிதன் செய்திருந்தாலும், எத்தனை முறைகள் அந்தப் பாவங்களில் அவன் விழுந்திருந்தாலும், சகலத்தையும் பொறுத்துக்கொள்ள, இயேசுநாதர் தமது திருச்சபைக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்திருக்கிறார். கடவுள் மாத்திரமே பாவத்தைப் பொறுக்க முடியுமேயொழிய மனிதனால் தன் சொந்த பலத்தினால் பாவப்பொறுத்தல் அடையவோ அல்லது கொடுக்கவோ முடியாது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இயேசுநாதர் தாம் நிறுவிய திருச்சபையின் குருக்களுக்கு இப்படிப்பட்ட வல்லமையைக் கொடுக்க சித்தங்கொண்டார். ஆகவே ஏக, பரிசுத்த அப்போஸ்தலிக்க, கத்தோலிக்க திருச்சபையின் குருக்களுக்கே இந்த அதிகாரம் உண்டு. வேறு எவருக்கும் இந்த உரிமை இல்லை.

**2. பாவப்பொறுத்தல் அடையும் வழிகள்**

இயேசுநாதர் தமது அளவில்லாத பேறுபலன்களை நமக்கு கொடுக்கும்படியாக அருள்சாதனங்களை அதாவது தேவத்திரவிய அநுமானங்களை ஏற்படுத்தினார். அவற்றின் வழியாய் மனிதருக்கு பாவப் பொறுத்தலையும், இஷ்ட வரப்பிரசாதத்தையும் கொடுக்க விரும்பினார். பாவத்தைப் பொறுப்பதற்கு முக்கியமாய், ஞானஸ்நானம், (திருமுழுக்கு), பச்சாத்தாபம் (ஒப்புரவு) ஆகியவற்றை ஏற்படுத்தினார். அவஸ்தைப்பூசுதல் எனும் நோயில்பூசுதலும் நோயாளிகளிடத்திலுள்ள மீதியான பாவங்களை மன்னிக்க உதவுகிறது.

**3. அதிகாரம் உடையோர் யார்?**

அருள்சாதனங்களை நிறைவேற்ற திருச்சபையில் குருக்களுக்கு பொதுவான வல்லமையிருந்தாலும், குறிக்கப்பட்ட இடங்களில் மாத்திரமே அப்படிச் செய்ய முடியும். மறைமாவட்ட ஆயருடைய அதிகாரம் பங்கிலுள்ள குருக்களுக்கு வழங்கப்படுகின்றது. மேலும், தேவையின்படி பங்குக் குரு அவரால் அழைக்கும் குருவுக்கு அப்பங்கில் அதை நிறைவேற்ற அதிகாரமளிக்க வேண்டும். ஒரு ஆயரால் பாவ மன்னிப்பு அதிகாரம் ஒரு குருவுக்கு அளிக்கப்படுமாயின் அக்குரு அந்த ஆயரோடோ அல்லது துறவற சபையைச் சார்ந்த குரு, துறவற சபையோடு ஒன்றிப்பில் இருக்குமளவும் அகில உலகத் திருச்சபையிலும் பாவத்தை மன்னிக்க அவரால் கூடும் ஒரு மறைமாவட்ட ஆயர் அவ்வதிகாரத்தை இரத்துச் செய்யவும் கூடும்.

**4. அதிகாரமில்லாத குரு பாவப் பொறுத்தல் அளிக்கலாமா?**

அப்படியே ஒருவர் குருப்பட்டம் பெற்றிருந்தாலும், பாவப் பொறுத்தல் அதிகாரமோ அல்லது திருவருட்சாதனங்களை நிறைவேற்றும் அதிகாரத்தையோ இழக்க நேரிடின் அவரால் பாவப் பொறுத்தல் அளிக்கமுடியாது. யாராயினும் அப்படிப்பட்ட குருவிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்தால் அது செல்லுபடியற்றது. சரியான அதிகாரமுள்ள இன்னுமொரு குருவானவரிடம் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆயினும் மரண சமயத்திலிருக்கிறவர்களுக்கு பட்டம் பெற்ற எந்த ஒரு குருவும் இவ்வருட்சாதனங்களை நிறைவேற்றலாம். ஏனெனில் மரண சமயத்தில் எல்லோரும் இயேசுநாதரிடத்தில் நல்ல தீர்வை பெற்று, மோட்ச இராச்சியத்தில் சேர வேண்டுமென்பதே திருச்சபையின் முழு விருப்பமாகும்.

**வினாக்கள் :**

1. பாவபொறுக்கும் அதிகாரத்தை திருச்சபைக்கு கொடுத்தவர் யார்? எதற்காக? எல்லாக் குருக்களாலும் பாவத்தை பொறுக்க முடியுமா?
2. ஞானஸ்நானம் பெறும் வளர்ந்தவர் ஒருவருக்கு அதேநாளில் பாவசங்கீர்த்தனம் தேவையா? ஏன்?

*தொடரும்....*

**விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**
*வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி*
*ஆசிரியர், ஞான ஒளி,*
*கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,*
*இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய*
*மாவத்தை, கொழும்பு - 08.*

## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

# மனித செயற்பாடு (ஹியூமன் பிஹேவியர்)



1. ஒரு மனிதனுடைய செயற்பாடுகள், அவன் செயற்படும் விதங்களைப் பார்த்தால் அவை அவனுக்கு எங்கிருந்து வந்தன? என்பதை அறிவது கடினம். இதனை அடிமட்டத்திலிருந்து பார்ப்போம். **கணவன் தனது மனைவியை அடித்துவிட்டார்.** இது ஒரு செயலாகும். இந்தச் செயல் **உணர்ச்சிகளுடனே** தொடங்குகின்றது. ஒருவருக்குக் காம உணர்வு அதிகரிக்கின்றது என வைத்துக்கொண்டால் அவர் சில வேளைகளில் அதைக் கட்டுப்படுத்த முடியாது மற்றவருடன் செயற்படுகின்றார்.

பொதுவாக நாம் ஒருவர் ஒருவருடன் உறவு கொள்வது உணர்ச்சிகள் மூலமே. ஒருவரைப் பார்க்கும்பொழுது நல்ல உணர்ச்சி எனக்கு ஏற்பட்டால் அவருடன் நெருங்குவேன். அவரைப் பார்க்கும்பொழுது வெறுப்புணர்வு ஏற்பட்டால் அவரை நெருங்கமாட்டேன். ஒருவரை நெருங்குவதும், தூரமாகுவதும் உணர்ச்சிகள் மூலமேயாகும். கணவன் மனைவி உறவும் அவ்வாறே. உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

2. எமது செயலுடன் உணர்ச்சிகள் மட்டுமா தொடர்புகொள்ளும்? வேறு எவை எமது செயல்களுடன் தொடர்பு கொள்கின்றன? எமது **சிந்தனைகள்** (Thinking) தொடர்பு கொள்கின்றன இந்தச் சிந்தனை எனக்குள் ஏற்பட்டதால் நான் இந்தச் செயலைச் செய்தேன். "இந்தப்பழம் எமது ஆரோக்கியத்திற்கு நல்லது" என்று ஒருவர் கூறுகிறார். அதைக்கேட்டு நான் அந்தப் பழத்தைச் சாப்பிடப்பழகுவேன். ஏன்? எனது சிந்தனையில் அப்பழம் எனது ஆரோக்கியத்திற்கு நல்லது என்று ஏற்பட்டதால் சாப்பிடப்பழகுவேன். **இதில் உணர்ச்சிக்குத் தொடர்பு இல்லை.** எனது அறிவு, சிந்தனையை முன்கொண்டு செயற்படுகிறேன். எமது செயற்பாடுகளில் எமது உணர்ச்சிகள் தொடர்பு கொள்ளாமலே எமது அறிவு, சிந்தனை மூலம் செயற்படுகின்றோம்.

3. சில நிகழ்ச்சிகளில் எமது அறிவும் அதாவது சிந்தனையும், உணர்ச்சிகளும் தொடர்பு கொள்ளும். எமது சிந்தனையும், உணர்ச்சியும் உணவை நல்லது என்றதும் அதில் ருசி எமக்குத் தெரிகிறது. இங்கே எனது அறிவு, சிந்தனையும் உணர்ச்சியும் தொடர்புகொள்கின்றது.

4. மேலும் எமது செயலில் எமது விருப்பமும் (will) தொடர்பு கொள்கின்றது. இது சிந்திப்பதைவிட மேற்பட்டது. எனது சிந்தனை நல்லது என்றது. அதைச் சாப்பிடவேண்டும் என்ற உறுதி ஏற்படும்போது செயற்படுகின்றோம். உதாரணமாக பாகற்காய் கசக்கும் இதைத்தெரிந்திருந்தாலும் அதை உணவில் சேர்க்கவேண்டும் என்று உறுதி எடுத்தால் அந்தத் தீர்மானம் என்னைப் பாகற்காய் கறியை சாப்பிடத் தூண்டும். இங்கே அச்செயலைச் செய்ய எனது தீர்மானம் என்னைத் தூண்டுகின்றது. இங்கே விருப்பமில்லாத உணர்ச்சி இருந்தாலும் நான் எடுத்த தீர்மானம், உறுதி என்னை உண்பதற்குத் தூண்டுகின்றது.

எமது செயற்பாடுகள் சில வேளைகளில் சிக்கலாகலாம். உணர்ச்சிகளுக்கு எதிராகச் செயற்பட வேண்டிவரும். பெரும்பாலும் **கடமைகளைச் செய்யும்போது இதை அறியலாம். பிள்ளைக்கு நோய் வந்துவிட்டது.** வைத்தியசாலைக்குப் பிள்ளையைக் கொண்டு செல்ல வேண்டும். அங்கு சென்றால் பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிவரும் என்பதால் விருப்பமில்லாத உணர்ச்சிகள் ஏற்பட்டாலும் கட்டாயம் நான் கஷ்டப்பட்டாவது பிள்ளையைக் காப்பாற்றவேண்டும் என்று தீர்மானம் எடுத்ததும் உணர்வுக்கு எதிராக எம்மைச் செயற்பட எமது தீர்மானம் தூண்டுகின்றது.

**பாகற்காய் சாப்பிடுவது நல்லது என்று தெரிந்தாலும் சிலரால் சாப்பிடமுடியும், சிலரால் சாப்பிடமுடிதில்லை.** ஏன்? ஒவ்வொருவரது **ஆளுமையும்** வேறுபட்டவை. அதே போன்று **பெறுமதிகளும், மனப்பான்மைகளும்** ஆளுக்காள் வேறுபட்டவை. ஆகவே அவரது செயற்பாட்டின் பின்னால் இவைகளும் உள்ளன.

*தொடரும்....*

# முதியோரைப் போற்றுவோம்

"பிள்ளைகளின் பெருமை அவர்கள் தந்தையரே" (நீ. மொ. 17:16) என்று அழகாக கூறுகின்றது நீதிமொழிகள் நூல். "தந்தையரை மதிப்போர் பாவங்களுக்கு கழுவாய் தேடிக்கொள்கின்றனர். அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர்" (சீராக் 3:3-4)

"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும் படி உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" (வி.ப 20:12) என்பது இறைவன் தந்த கட்டளைகளுள் ஒன்று. எனவே எமது பெற்றோரை வயதில் மூத்தோரை மதித்து நடப்பது எமது கடமையாகும். நாம் இவர்களை மதித்து, மரியாதை செய்து, அன்பு காட்டி அவர்களைப் பார்த்துக் கொள்ளும்போது இறைவனின் ஆசீர் நமக்கு நிறைவாகக் கிடைக்கின்றது.

திருவிவிலியத்தில் பெற்றோரை பெருமைப்படுத்தி இறையாசீரைப் பெற்றுக்கொண்ட பலரைப் பார்க்கலாம். யாக்கோபு, யோசேப்பு, தோபியா.

பெற்றோரை மதித்து நடப்பதில் நமக்கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டு நம் பெருமான் இயேசுக் கிறிஸ்து தான். (லூக் 2:51) பெற்றோருக்கும் முதியோருக்கும் நாம் செய்யும் முதற் கடமை அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பதுதான்.

அவர்களுக்கு நாம் செய்யும் உதவி அவர்களுக்காக செவிப்பதும், இறைபுகழ் கூறுவதுமாகும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்






## பொதுக்காலத்தின் 27வது ஞாயிறு 05.10.2014

**வாசக விளக்கம்:** நன்கு வளர்ந்து பாதுகாக்கப்பட்ட திராட்சைத் தோட்டத்திலிருந்து உண்மை, நம்பிக்கை போன்ற கனிகளை எதிர்பார்த்து இறைவன் ஏமாந்து போகின்றார். எனவே இறைவாக்கினர் எசாயா வழியாக மக்களின் நிலையையும் அதன் பலனாக விளையப் போகும் தீங்கையும் விபரிக்கின்றது இன்றைய முதல் வாசகம். பிலிப்பு நகர மக்கள் அவர்கள் பெற்றுக் கொண்ட விசுவாசத்திற்கேற்ப கிறிஸ்துவுக்கு சாட்சி பகர்கின்ற வாழ்க்கை வாழ அழைப்பு விடுக்கும் தூய பவுல் அடியார் அவர்கள் மிகுந்த நல்ல கனி தந்து செழித்தோங்க வேண்டும் என்பதற்காக தனது வாழ்வையே உதாரணமாக தருவதை இரண்டாம் வாசகத்தால் விளக்குகிறார். இன்றைய நற்செய்தி வாசகம் கொடிய குத்தகைக்காரர் உவமையைக் விளக்குகின்றது. திராட்சைத் தோட்டம் இஸ்ரயேல் மக்களையும் தோட்டத்தின் உரிமையாளர் கடவுளையும் தோட்டத் தொழிலாளர் யூதத் தலைவர்களையும் தோட்டப்பணியாளர்கள் பழைய ஏற்பாட்டு வெவ்வேறு இறைவாக்கினர்களையும் குறிக்கின்றது. கடைசியாக வந்த பணியாளர் இயேசுக்கிறிஸ்துவாகும். இறையாட்சிப் பணி ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு மட்டுமல்ல அனைத்து இனத்தவர்களுக்கும் பொதுவானது அனைத்து இனத்தவரும் இணைந்தே திருச்சபையை உருவாக்க வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் விளக்குகின்றது. இதற்கு வேண்டிய அருள் வரங்களைக் கேட்க பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் :** எசாயா 5:1-7

ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ரயேல் குடும்பத்தாரே.

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் குடும்பத்தாரே

**இரண்டாம் வாசகம் :** பிலிப் 4:6-9

அமைதியை அருளும் கடவுள் உங்களோடு இருப்பார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் கனிதரவும் நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன் அல்லேலூயா

**நற்செய்தி :** மத்தேயு 21:33-43

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

ஆண்டவர் இயேசு இவ்வுலகில் உருவாக்கிய திராட்சைத் தோட்டமாகிய தூய திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் நற்கனி கொடுக்கும் தோட்டத்தின் ஊழியர்களாக என்றும் விளங்கவும் உண்மை நம்பிக்கை போன்ற கனிகளை வழங்க மக்களை வழிநடத்தவும் தேவையான அருட்கொடைகளை தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் தலைவர்களும் மக்களும் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்று பட்டு உழைக்கவும் ஏற்றத் தாழ்வுகள் இல்லாத சமூகத்தை உருவாக்கவும் நற்கனி கொடுக்கும் மரங்களாகத் திகழவும், இறைவன் அருளும் அமைதியில் நிலைத்து வாழவும் எமது சொல்லாலும் செயலாலும் உழைப்பாலும் ஏனையோரை வாழ வைக்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று..

நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது என்ற இறைவார்த்தையை ஏற்று நற்கனி தரும் நல்வாழ்வை நாம் வாழவும், இம் மரியன்னை ஆண்டிலே சிறப்பாக இம்மாதத்தில் நாம் குடும்பமாக செபித்து இறைத்திட்டத்தை நிறைவேற்றிய மரியன்னைபோல் இறைவனுக்கு உகந்த வாழ்வை வாழ்ந்திட வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 28வது ஞாயிறு 12.10.2014

**வாசக விளக்கம்:** கடவுளின் அழைப்பின் முத்திரையை எம்முடைய திருமுழுக்கின் மூலமாக நாம் பெற்றுக் கொண்டோம். ஆனால் அந்த அழைப்பை இன்றைய மூன்று வாசகங்களும் மனிதர்களின் அழைப்புக்களிலே இறைப்பிரசன்னம் நிரம்பி இருக்கவேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றன பழைய ஏற்பாடு முதற்கொண்டே இறைவன் பல்வேறு மனிதர்களை அழைக்கின்றார். இறைவனின் எல்லாவித அழைப்புக்களிலும் மனித மகிழ்ச்சி, மனித விடுதலை போன்ற ஆழமான வாழ்வுப் பாடங்கன் இடம் பெறுகிறது. குறிப்பாக இன்றைய முதல் வாசகத்திலும், நற்செய்தி வாசகத்திலும் ஆண்டவர் அளிக்கும் மாபெரும் விருந்துக்கான அழைப்பு மையக் கருத்தாய் இருப்பதைப் பார்க்கின்றோம். ஆண்டவரின் ஆவியார் இருக்கும் இடத்தில் விடுதலை உண்டு. எனவே ஆண்வடவர் அளிக்கும் விருந்திலே தூய ஆவியாரின் வல்லமை எல்லாருக்கும் கொடுக்கப்படுகின்றது. எல்லா மனிதர்களுக்கும் எல்லாத் தீமைகளிலிருந்தும் விடுதலை தருகின்ற விருந்தாகத் தான் ஆண்டவரின் விருந்திற்கான அழைப்பு உள்ளது. இறைவனின் அழைப்பை நாம் புறக்கணித்தோமேயானால் நாம் புறம்பே தள்ளப்படுவோம். தூய உள்ளத்தினர் அனைவருக்கும் இறுதி நாட்களில் வாழ்வு கிடைக்கும் நாம் வாழும் இக்காலத்தில் திருப்பலிதான் ஆண்டவர் அளிக்கும் மாபெரும் விருந்து. இதை உணர்ந்து வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** எசா 25:6-10

ஆண்டவர் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார் அனைவரின் துன்பத்துகிலைத் தூக்கி எறிவார்.

**பதிலுரைப்பாடல் :** நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.

**இரண்டாம் வாசகம் :** பிலிப் 4:12-14, 19-20

எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்று நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக அல்லேலூயா

**நற்செய்தி :** மத் 22:1-14

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

திருச்சபை மக்கள் அனைவரும் விசுவாசத்தில் வாழ்வதற்கு அவர்களை தூய உள்ளத்தோராய் வாழ வழிகாட்டும் திருச்சபையையும், அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் உமது அருட்கரத்தால் ஆசீர்வதித்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டின் தலைவர்களும், தொண்டர்களும் பொறுப்பில் இருக்கும் அதிகாரிகளும் தமது அழைத்தலைப் புரிந்துகொண்டு மக்கள் பணியே கடவுளின் பணி என்ற மனநிலையோடு தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர நிறைவேற்றி மக்களுக்ககாக தம் வாழ்வினை அர்ப்பணிக்க தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று..

கிறிஸ்தவ மக்களாகிய நாமனைவரும் இறைப்பிரசன்னத்தை உணர்ந்தவர்களாக எமது அழைப்பிற்கேற்ப வாழ்வினை வாழவும், இறைவனின் துணை கொண்டு தூய வாழ்வில் நிலைத்திடவும், தீமைகளில் இருந்து விடுபட்டு ஆண்டவர் அளிக்கும் விருந்திலே பங்கு கொள்ளவும் வேண்டிய அருட்கொடைகளை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

# அகுவைனாஸ் பல்கலைக்கழகத்தின் ஆரம்பம்



**அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை (முன்னாள் பேராயர்)**

**தமிழில் அருட்தந்தை அ. உதயதாஸ்**




1955ம் ஆண்டு ஆவணி மாதம், அதுவரைகாலம் புனித பேர்ணாட் பெரிய குருமடம் இருந்த இடத்திலேயே, அகுவைனாஸ் உயர் கல்வி நிலையம் அமைக்கப்பட்டது. இவ்விடமானது 1891ம் ஆண்டு விலைக்கு வாங்கப்பட்டது. அதில் பழைய காலத்தைச் சேர்ந்த பங்களா ஒன்றும் இருந்தது. கி.பி 1891ல் இருந்து இது புனித பேர்ணாட் பெரிய குருமடமாகத் திகழ்ந்தது. ஆரம்பத்தில் 8 குருமாணவர்கள் இருந்த போதிலும் பின்னர் எண்ணிக்கை அதிகரிக்கவே, கர்தினால் தோமஸ் கூரே ஆண்டகையினால் (அ.ம.தி) அக் காலத்தில் இன்னும் சில கட்டிடங்கள் கட்டப்பட்டன. 2ம் உலக மகா யுத்த காலத்தில் பெரிய பாடசாலைகள் படையினர்கள் தங்குவதற்கு பயன்படுத்தப்பட்டதன் நிமித்தம் மருதானை புனித ஜோசப் கல்லூரியின் கிளையொன்று புனித பேர்ணாட் குருமடத்திலும் இயங்கியதை நாம் மறந்துவிடலாகாது. யுத்த முடிவின் பின்னர் 1946ம் ஆண்டு மாசிமாத நடுப்பகுதியிலேயே திரும்பவும் புனித ஜோசப் கல்லூரி மருதானையில் இயங்க ஆரம்பித்தது.

இக்காலத்தில் தான் அகுவைனாஸ் உயர் கல்விக் கல்லூரிக்கான விதைகள் உருவாக ஆரம்பித்தது. அன்றைய புனித ஜோசப் கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய அருட்தந்தை பீட்டர் அ. பிள்ளை (அ.ம.தி) அடிகளார் உயர் கல்விக்கான வகுப்புக்களை அங்கேயே மாலைநேரத்தில் ஆரம்பித்தார். சாதாரண பாடசாலை நேரம் பி.ப 3.25க்கு முடிந்ததும் லண்டன் உயர்தர வகுப்புக்களுக்காக மாணவர்கள் அங்கே வந்தனர். இப்பாடநெறியானது "புனித ஜோசப் கல்லூரியின் பட்டப்படிப்பிற்கான ஆயத்தப் பிரிவு" என அழைக்கப்பட்டது. இம்மாலை வகுப்பானது பணமில்லாத காரணத்தால் படிப்பை இடைநடுவே விட்டு வேலைக்குச் செல்பவர்களும் பட்டம் பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவே ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு ஆரம்பித்த பாடநெறியானது வளர்ந்து வந்த அதேவேளை புனித பேர்ணாட் குருமடமானது கண்டி, அம்பிட்டியாவிற்கு கொண்டு போகப்பட்டது. இது 1955ம் ஆண்டு ஆவணி மாதத்திலேயே இடம்பெற்றது. இவ்வாறு இது நிகழவிருப்பதை அறிந்து அப்போதிருந்த பேராயர் கர்தினால் கூரே (அ.ம.தி) ஆண்டகை, அருட்தந்தை பீட்டர் பிள்ளையின் யோசனைக்கு அமைய கத்தோலிக்க உயர் கல்விக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்காக அவ்விடத்தை கையளித்தார். இது 1954ல் இடம்பெற்றது. தேவையான கட்டிடங்களைக் கட்டவும், புனர்நிர்மாணம் செய்யவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதலில் இது பக்கத்திலுள்ள 4 மாடிக் கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டு இது "விஞ்ஞானப் பிரிவு" என்று அழைக்கப்பட்டது. பின்னர் இடையிலிருந்த 2மாடிக் கட்டிடம் மூன்று மாடியாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு காலத்திற்கு காலம் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன.

இக்கட்டிடங்களைக் கட்டும் காலத்தில் திரு இயூஸ்டஸ் பர்னாந்து பொறியியலாளராகவும், திரு. ஸ்டீபன் டி சில்வா கட்டிடக் கலைஞராகவும் பணியாற்றினர். இவ்வாறு தேவையான வேலைகள் முடிவுற்றதும் கி.பி 1956ஆம் ஆண்டு தை மாதம் புதிய இடத்தில் அக்குவைனாஸ் உயர் கல்லூரி வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. கி.பி 2004ல் இக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியாக பட்டமளிக்கக்கூடிய வளாகமாக அரசால் அனுமதிக்கப்பட்டது. இன்று "டொன் பீட்டர் கேட்போர் கூடம்" அமையக் காரணமாய் இருந்தவர் இக்கல்லூரி அதிபராக இருமுறை பணியாற்றிய அதி வண தந்தை டொன் பீட்டர் அடிகளாரேயாவார். மேலும் வலது பக்கத்தில் அமைந்துள்ள 4 மாடிக் கட்டிடமானது 6வது அதிபராகக் கடமையாற்றிய அருட்தந்தை கிறிஸ்பின் லியோ அடிகளாரின் காலத்தில் 2000ம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்டது. இது "மிலேனியம்" கட்டிடம் என அழைக்கப்படுகின்றது.

இன்று அக்குவைனாஸ் உயர் கல்லூரியானது பட்டமளிக்கும் உயர் கல்வி நிறுவனமாக விளங்குகின்றது. வெளிவாரிப் பட்டங்களை அழிக்கவும் தேசிய - சர்வதேச பல்கலைக்கழகங்கள் பலவுடனும் ஒன்றிணைந்துள்ளது. இன, மொழி, சமய வேற்றுமைகள் இன்றி அனைவரும் உயர்கல்வி கற்க உகந்த இடமாக அமைவதோடு சிறந்த சேவையினையும் வழங்குகிறது. தெளிவான தரிசனத்துடன், நேர்மையான உள்ளத்துடன் தொடங்கப்பட்ட இச்சிறிய வேலை இன்று இறையாசீருடன் பல்மடங்கு வளர்ச்சியுற்றுள்ளது எனும்போது பெருமகிழ்ச்சியே. இன்று இதன் 7வது அதிபராக அருட்தந்தை பிளசிடஸ் டி சில்வா அடிகளார் பணியாற்றுகின்றார். தமிழ்மொழியிலான இறையியல் பட்டப்படிப்பு மற்றும் குறுங்கால இறையியல் பயிற்சி நெறிகளும் இங்குஇடம்பெறுவது யாவரும் அறிந்ததே.

**அக்குவைனாஸ் உயர் கல்லூரியின் கல்விப்பணி மேலும் சிறக்கட்டும்.**

## மறைப்பணியாளர் என்பவர்

*இறைவார்த்தையை ஏற்பவர்*

**அழைத்தலைப் பற்றி மகிழ்ச்சியுறுவர்**

*தியாகம் உள்ளவர்*

**ஆழமான விசுவாசத்துடன் வாழ்பவர்**

*சாட்சியாக வாழ்பவர்*

**மன்னிப்பவர்**

*அர்ப்பணிப்புள்ளவர்*

**பாட ஆயத்தம் செய்பவர்**

*விவிலியத்தைப் பற்றி அறிந்தவர்*

**செபிப்பவர்**

*இறைச்செயலை புரிந்து கொள்பவர்*

**பிள்ளைகளை அன்பு செய்பவர்**

*ஒற்றுமையாக செயற்படுபவர்*

# திருச்சபையில் தூய்மை நிலையும் தூயவர்களும்

கிறிஸ்தவ பாரம்பரியத்தில் திருத்தூதர்கள், திருச்சபைத் தந்தையர்கள், திருத்தந்தையர்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் எனப் பல் நிலைக் கிறிஸ்தவர்கள் திருச்சபையில் தூய்மை நிலைக்கு சான்றாக உள்ளனர். இதற்கு அவர்களின் வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்தது அவர்களின் இறையனுபவமாகும். இறையனுபவத்தின் தூண்டுதலில் அவர்கள் அவர்களது வாழ்க்கை நிலைக்கு உண்மைத்-தன்மையுடன், அவரவது வாழ்க்கைச் சூழலில் ஈடுபாடுடன் வாழ்ந்து தூய்மை நிலையை அடைந்தார்கள். இக்கட்டுரையில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையின் ஒளியில் திருச்சபையில் தூய்மை நிலைபற்றியும் (திருச்சபை - எண்கள் 39 - 42), தூயவர்களாக திருச்சபையில் ஏற்கப்பட்டவர்கள் யார் என்பது பற்றியும் காணலாம்.

## கிறிஸ்தவர்களின் தூய்மை நிலை

இறைமக்கள் சமுதாயமான திருச்சபையானது மூவொரு கடவுளின் பிரசன்னத்தினாலும், அருட்கொடையினாலும் தூய்மை நிலையைப் பெற்றுள்ளது. திருமுழுக்கு வழியாக அனைத்துக் கிறிஸ்தவர்களும் அவரவர் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப தூய்மையுடன் வாழவும் சாட்சியங்கள் ஆகிடவும் அழைக்கப்படுகிறார்கள் (1தெச. 4:3, எபே. 1: 4). திருச்சபையின் தூய்மை நிலையானது, அனைத்து கிறிஸ்தவ விசுவாசிகளின் வாழ்வில் தூய ஆவியின் கனிகள் வழியாக வெளிப்படுகின்றது (கலா. 5: 20). “பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை” ஆகிய பண்புகளால் அணிசெய்யப்படுகின்றது (கொலோ. 3: 12).

## கிறிஸ்தவர்களின் தூய்மை நிலைக்கு களம்

திருச்சபையின் தூய்மை கிறிஸ்தவர்கள் சமுதாயத்தில் மனிதப் பண்புகளுடன் வாழவும், இறை விருப்புக்குப் பணிந்து, பிறர் பணிக்காக தம்மை அர்ப்பணிக்கவும் தூண்டுதல் அளிக்கின்றது. அதனால் கிறிஸ்தவர்களின் பல்வேறு பணிப் பொறுப்புகளிலும், உயிருள்ள விசுவாசத்துடன் எதிர்நோக்கை இழக்காது அவர்கள் செயல்படுவது கடப்பாடாகின்றது. சிறப்பாக வறுமையிலும், வலுவின்மையினாலும், நோயினாலும், பற்பல துன்பங்களினாலும் துன்பப்படுபவர்கள், ஒடுக்கப்படுபவர்கள், நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுபவர்கள் தூயநிலைக்கு அழைப்புப் பெறுகின்றார்கள். இயேசுக் கிறிஸ்துவின் பார்வையில் இவாகள் பேறுபெற்றவர்களாவர். ஆக, கிறிஸதவகள் இறை திருவுளத்தோடு ஒத்துழைத்து, இவ்வுலகில் தங்கள் வாழ்க்கை நிலைமைகள், கடமைகள், அனைத்தின் வழியாகவும் நாளுக்கு நாள் தூய்மை நிலையில் வளர அழைக்கப்படுகின்றார்கள்.

## கிறிஸ்தவர்களின் தூய்மை நிலைக்கு வழிகள்

இறைவார்த்தைக்கு பணிவுடன் செவிசாய்ப்பதும், காலத்தின் குறிகளை நற்செய்தியின் ஒளியில் ஆய்ந்து அறிந்து செயல்படுவதும் (லூக். 12: 56 - 57), இறைவழிபாட்டில் பங்கு கொள்வதும், சுயநலமற்ற பிறரன்புப் பணியில் ஈடுபடுவதும் தூய்மை நிலையை அடையும் எளிமையான வழிகளாகும். நற்செய்தியில் காணப்படும் ஏழ்மை மனப்பான்மைக்கு எதிராக செல்வங்களில் பற்றுக் கொண்டிருப்பதால், உண்மை அன்பை வாழ்வதற்கு தடை ஏற்படாதவாறு தங்கள் எண்ணங்களை நல்வழிப்படுத்தி வாழ்வதும் தூய்மை நிலையை அடைய வழியாகும். புனித பாவுலுவின் படிப்பினையில் உலகில் உலகப் போக்குக்கு அமையாது, உள்ளத்தில் மாற்றம் பெற்றவர்களாக, இறை விருப்பை வாழ்வது (உரோ. 12: 2) தூய்மைக்கு வழியாகும்.

## திருச்சபையில் தூயவர்கள் யார்?

கிறிஸ்தவ திருச்சபையின் தூயவர்கள் என்பவர்கள் இயேசு மார்த்தாவிடம் கூறிய “ஒரே ஒரு காரியம் தான் தேவை” என்பதற்கு உரிய அழுத்தம் கொடுத்து வாழ்ந்தவர்களும் வாழ்பவர்களுமாகும். கிறிஸ்துவின் அன்பிலிருந்து யார் என்னைப் பிரிக்க முடியும் என வாழ்ந்தவர்களும் வாழ்பவர்களுமாகும். கலப்பையில் கை வைத்த பின் திரும்பிப் பார்க்காமல் குறியீட்டை வாழ்ந்தவர்களும் வாழ்பவர்களுமாகும். இயேசுவின் நாமத்தில் துன்புறுவோரோடு துன்புறுவோரும், துன்பப்படு-வோருமாவர். இவர்கள் மனித பண்புகள் ஏதாவது சிலவற்றில் முழுமைகாண வேண்டும் என முயற்சித்தவர்களாவர். இவர்கள் இயேசுவின் வழியைத் தேர்ந்தெடுத்து, அதனை வித்தியாசமாக வாழ்ந்தவர்களும், வாழ்பவர்களுமாவர்.

## யோசப்வாஸ் அடிகளாரின் தூய்மை நிலை

இந்தியாவில், கன்னட மாநிலத்தில், கோவை என்ற பகுதியில் கொங்கனி மொழிபேசும் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த யோசப் வாஸ் அடிகளார், தமது குருத்துவ வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் தம் ஊருக்கு அயலில் பணிபுரிந்தார். வழமையான குருத்துவப் பணி வாழ்க்கையில் மறையுரை ஆற்றல், இளைஞரை நெறிப்படுத்தல் போன்ற புதிய பணிப் பரிமாணங்களிலும் ஈடுபாடுகொண்டார். மக்கள் மத்தியில் உடன்பயணிப்பு, மக்களின் தேவைகளைக் குவிமையங்கொண்ட அர்த்தமுள்ள வழிபாடுகள், மக்களின் குரலை அறிந்து அறிவுரை வழங்கல், எளிமையான வாழ்க்கை என்பன அவரது குருத்துவ வாழ்வின் ஆரம்பத்திலேயே விடியல் பெற்று, அவருக்கு பெயரும் புகழும் சேர்த்தன.

இக்காலகட்டத்தில்தான் இலங்கையில் காலணித்துவ கால கத்தோலிக்க விசுவாசிகளின் இன்னல்கள் பற்றிய செய்தி அவருக்கு எட்டியது. தான் கேள்வியுற்ற செய்தியில் இறைவனின் அழைப்பை மீண்டும் உணர்ந்து, கேட்க விழைந்தார். மக்களின் காலத்தை ஒட்டிய தேவைகளையும், அவர்களின் துயரங்களையும் அறியும்போது, இறை தூண்டலை உணர்ந்து செயல்படுவதே தூய்மை நிலையின் உண்மைத்தன்மையைப் பேணும் வழியாகும். தூய்மை நிலையை இயக்காற்றலுடன் வாழும் இரகசியமாகும். இப்பண்பை யோசப் வாஸ் அடிகளாரின் குருத்துவ வாழ்வில் உள்ளங்கை நெல்லிக்கனி போல காணமுடிகிறது. இலங்கைக்கு ஓர் கத்தோலிக்க குரு செல்வது அவரது உயிருக்கே ஆபத்து என அறிந்தும் இலங்கை செல்வதற்கு எண்ணித் துணிந்தார். ஓர் இரவலர் வேடம் பூண்டு பயணமானார். எங்கு கரை சேர்வோம் என்ற ஆதங்கம் இன்றிப் பயணமானார். அவருக்கு இறை நம்பிக்கை, இன்னலுற்றவர் மத்தியில் பணிபுரியும் தெளிந்த பார்வை, அர்ப்பணிக்கும் மனத் திண்மம் நிறையவே இருந்தது. மன்னார் கரையில் இறக்கிவிடப்பட்டார். இரவல் இடங்களில் தங்கி, இரந்துண்டு, மக்களைச் சென்றடைய நடைபயணமானார். இலங்கையின் வடபகுதி, வடமேற்பகுதி, வன்னி நிலப்பரப்பு, மத்திய மலைப்பகுதி எனப் பயணித்தார்.

இப்பயணத்தில் மக்களுடன் உரையாடி, விசுவாசத்தை வாழ, அவர்கள் குருக்களைத் தேடும் அவர்களின் இலைமறைகாயாக இருந்த தேவையை அறிந்தார். இரவலர் வேடத்தில் ஓர் குருவை அடையாளங் கண்ட சிலர் அவருக்கு தங்குமிடமும் பாதுகாப்பும் அளித்தனர். ஆனால் அவ்விடங்களில் நிரந்தரமாகத் தங்கிடாமல், மக்களைத் தேடிச்செல்லும் தம் பயணத்தை தொடர்ந்தார். நோய்வாய்ப்பட்டார். ஆனால், மக்கள் கூடியிருந்த இடங்களுக்குச் சென்று, அவர்கள் மத்தியில் திருப்பலி நிறைவேற்றினார். நோயாளர்களுக்காக செபித்-தார். அறிவுரைகள் வழங்கினார். காலணித்துவ சூழமைவில் சமூக அடித்தட்டில் தங்கி, பயணித்து பணிபுரிந்த பாங்கு அவரது தூய்மை நிலையை வாழ்ந்த சிறப்பு அம்சமாகும். இலங்கையில் விசுவாசிகள் துன்புறுத்தப்பட்டு, வாழ்வே அச்சுறுத்தப்பட்ட ஓர் சூழமைவில், விசுவாசத்தில் மக்களை உறுதிப்படுத்தி, அவர்களைக் குழுமம் குழுமமாக வாழ்வித்த ஓர் முதன்மை பணி முகவரான யோசப் வாஸ் அடிகளார் தூய்மை நிலையை அன்றே வாழ்ந்து-விட்டவராவார்.

## சிந்தனைக்கு

யோசப் வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் கிறிஸ்தவ இறை நம்பிக்கையில், யதார்த்த சூழமைவில் புதிய ஈடுபாட்டு வாழ்வியலுக்கு ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமூகத்தை இட்டுச் செல்கிறது. இன்றைய சட்ட இறுக்கம், சடங்கு மையம், மக்களின் வாழ்வு அனுபவங்களுடன் தொடர்பின்மை, மிகையான மரபுச்சார்பு, இனத்துவ முன்சார்பு, அருள்பணியாளர் ஆதிக்கம், பண்பாட்டு மயமாக்கலில் அந்நியத்தன்மை, மேலோட்டமான பக்தி வழிபாடுகள் என்பன கிறிஸ்தவர்கள் தூய்மை நிலையில் வளர, வாழ தடையாக இருக்கும் முக்கிய கூறுகளாகும். திருச்சபையின் தூய்மை நிலையை சிலரே விதி விலக்காக இம்மையில் பெறுகிறார்கள் எனும் புரிதல் பரவலாக வளர்ந்துள்ளது. ஆயினும் திருச்சபையின் ஒட்டுமொத்த வாழ்வே தூய்மை நிலைலையை அடைவதே என்பதால், அந்த நிலையை கிறிஸ்தவர்கள் வாழவும், பெறவும் திருச்சபைக்குள் வழி பிறக்குமா?



**ஜெராட் டீ ரொசய்ரோ, அ. ம. தி.**



கொழும்பு புதுச்-செட்டித்தெரு, புனித வியாகுல அன்னை ஆலயத்தின் வருடார்ந்த திரு-விழா 21.09.2014 ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை பவனியில் அன்னை அலங்காரத்துடன் வீதி உலா வருவதைப் படத்தில் காணலாம். இதன்பின் நற்கருணை ஆண்டவரின் ஆசீரும், அன்னையின் ஆசீரையும் மக்கள் பெற்றுக்கொண்டனர்.

**தகவல் :ரொபின்சன்**

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

திருச்சங்கத்தில் இவ்வாறு கூறுகின்றது. “உடல் ஒன்றே உறுப்புக்கள் பல, உடலின் உறுப்புக்கள் பலவாயினும் உடல் ஒன்றாய் இருப்பது போல கிறிஸ்துவும் இருக்கின்றார்” (1கொரி 12:12, LG -7) மேலும் திருச்சபையானது தேவதூதர்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாயிராமல் மரித்தோரும் உயிர்வாழ்கின்றவருமான புனிதர்களையும், பாவிகளையும் கொண்டுள்ள உயிர் வாழும் நம்பிக்கையின் சமூகமாகும். இதில் சில குறைபாடுகள் இருப்பினும் இதுவே கிறிஸ்துவுடன் அவரது சீடர்கள˙ கொள்ளும் நம்பிக்கையின் மொழியாகும். நமது விசுவாசப்பிரமாணத்தின் பொதுவான பிணைப்பை விசுவாசம் என்றும் அன்பு என்றும் பொருள்படும். “புனிதர்களின் சமூகம் என எடுத்துரைக்கின்றோம். இது விண்ணகத்தில் உள்ளோர், உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ளோர், இவ்வுலகில் உயிர்வாழ்வோர் ஆகிய எம் சகோதர சகோதரிகளின் உயிருள்ள பிணைப்பாகும். இப்படி இவ்வுலகில் உள்ள அனைவரோடும் இவ்வுலகிற்கு அப்பால் உள்ளவர்களோடும் நாம் கொள்ளும் சமூக உறவு மிகுந்த மகிழ்ச்சி தருவதாகும். திருச்சபை எனும் உடலின் தலையாகிய கிறிஸ்து இதற்கு வலுவூட்டி உயியோரட்டமானதாக்குகின்றார். இது மட்டற்ற மகிழ்ச்சியின் எல்லையற்ற அனுபவமாகும். இவ்வாறு திருத்தூதர்களினதும், மறைசாட்சிகளினதும், புனிதர்களினதும் நமக்கு முன்பாக உலக வாழ்வினின்று சென்றுவிட்டவர்களும், நமக்குப் பின்பாக வருகின்றவர்களினதும் திருச்சபையின் ஓர் அங்கமாய் நாம் இருப்பது பெரும் பேறானதாகும். இத்திருச்சபை காலத்தையும், அண்டவெளியையும் கடந்ததும் கிறிஸ்துவினாலேயே உருவாக்கப்பட்டதும் அவரை நெருங்கி பின்பற்றிய திருத்தூதர்கள் மற்றும் மறைசாட்சிகளை அடித்தளமாக கொண்டதாகும். எவரே ஒருவர் தொலைவான தொடுவானத்தில் தோன்றி “வாருங்கள் உங்களுக்கு உதவி புரிய திட்டமொன்று வைத்திருக்கின்றேன்” என்று சொன்ன-வுடன் இவை அனைத்தையும் விட்டுவிட்டுச் செல்ல எவரால் முடியும். இயேசுவும் இவ்வாறான போலி போதகர்களினால் நாம் தொலைந்து விடாதிருக்கும்படி எச்சரித்தரல்லவோ” “நானே அவர் என்றும், காலம் நெருங்கி வந்துவிட்டது என்றும் கூறுவார்கள்”(லூக் 21: 9) கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

**ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

**உங்கள் பேராயர்**

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்**




# உலக சிறுவர் தினம்

## 01.10.2014

"குழந்தையின் உள்ளம் இறைவனின் இல்லம்"

"ஒன்றே எங்கள் தேவன் ஒன்றே எங்கள் ஜீவன் எல்லோருமே ஓர் பூமாலை போல் அன்பாலே ஒன்று பட்டோம். நான் நீ பேதமில்லை ஓர் தாய் பெற்ற பிள்ளை" இக்கானவரிகளை எம்முள் தாங்கி ஒற்றுமையே பலம் என்ற வரிகளை வாழ்வினில் காட்டி நிற்கும் பேதுரு கல்லூரி மாணவர்களாகிய நாம் மனதினில் சுரந்த சிறு எண்ண ஓட்டங்களை எழுத்தினில் வடிக்கின்றோம் இச்சிறுவர் தினத்திலே....

## "ஒற்றுமையே பலம்"



நான் புனித பேதுரு கல்லூரியில் கல்வி கற்கும் கத்தோலிக்க மாணவன். "ஒற்றுமையே பலம்" என்பதைப்பற்றி பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் கிறிஸ்தவ வாழ்வு என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். பவுல் எம்மை ஒரு மனத்தவராய் இருக்கட்டாம். நாம் உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகவேண்டும். நாம் எம்மையே அறிவாளி எனக்கருதி பெருமிதம் கொள்ளக்கூடாது. தீமைக்கும் பதில் தீமை செய்யாதீர்கள். நாம் எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ண வேண்டும். நாம் எக்காரணம் கொண்டும் பழிவாங்கக் கூடாது அதைக்கடவுள் சினத்திற்கு விட்டு விட வேண்டும் என மறைநூலில் எழுதியுள்ளவாறு "பழி வாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன" என்கிறார் ஆண்டவர். "நீயோ, உன் எதிரி பசியாய் இருந்தால் அவனுக்கு உணவு கொடு, அவன் தாகத்தோடு இருந்தால் அவனுக்கு குடிக்க நீர் கொடு" என கூறுகின்றனது. நாம் தீமையை வெல்ல விடக்கூடாது. நன்மையால் நாம் தீமையை வெல்ல வேண்டும். இதுவே எமது இலட்சியமாகக் இருக்க வேண்டும். இதுவே கிறிஸ்தவம் ஒற்றுமை பற்றி கூறுகின்றது.

**ம.டொ. ஆதித்தியன்**



நான் புனித பேதுரு கல்லூரியில் கற்கும் இந்த மாணவனாவேன். எனது ஆசை எமது நாட்டிலிருக்கும் ஒவ்வொரு சமயத்தவர்களும் சந்தோஷத்துடனும், ஒற்றுமையுடனும் வாழவேண்டும் என்பதாகும். இந்து மாணவன் என்ற ரீதியில் அனைத்து மாணவர்களும் ஏனைய சமய மாணவர்களோடு புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இந்து சமயத்திலும் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்று ஐந்து தொழில்களையும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஷ்வரன், சதாசிவன் என்பவர்கள் இத்தொழில்களை ஆற்றுகின்றனர். நாம் இவ் ஐந்து பேரையும் தனித் தனியாக வணங்கினாலும் இவர்கள் அனைவரும் ஒரே கடவுளாகவே இருக்கின்றனர். அனைத்து சமயங்களிலும் ஏனைய சமயங்களை மதித்து அவர்களுடன் ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்றே குறிப்பிடப்படுகின்றது. நாம் இதற்கமைய இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம், இந்து சமயம், பௌத்த சமயம் என்றுவேறுபாடு பார்க்காமல் அனைத்து மாணவர்களும் எமது நாட்டவர் என்ற ரீதியில் அவர்களை ஒன்றிணைந்து சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வோமாக. ஒற்றுமையைப் பற்றி பாரதியார் கூட "கூடி விளையாடு பாப்பா" என்று குறிப்பிடுகின்றார்.

**ரா. அபினேஷ்**

## "ஒற்றுமையே பலம்"

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் பொருட்டு, பின்னர் உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக கண்ணியமிக்கவர்" (சங்கைமிகு அல்குர்ஆன் 49:13) இந்த இறை வசனத்தை அறியாதவர்கள் நம்மில் இருக்க முடியாது. இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், உலக மக்கள் அனைவரும் ஒரு தொப்புள் கொடியின் வழியே வந்த வழித்தோன்றல்கள் தான். நம்மில் ஏற்படுத்தப்பட்ட கோத்திரங்கள் அனைத்தும் நாம் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளத்தானே தவிர பிரிவினை பாராட்டி, பிரிந்து போவதற்கன்று என இவ்விறை வசனம் வலியுறுத்துகிறது.

"தன் பக்கத்திலிருக்கும் அண்டை வீட்டார் பசித்திருக்க, தான் மட்டும் வயிறார உண்பவர் ஓர் இறை நம்பிக்கையாளராக இருப்பதில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நபி(ஸல்) அவர்கள் தமது இறுதிப் பேருரையின் போது ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறி சமூகப் பிளவுக்கு முடிவு தந்து விட்டு சென்றார்கள். அது, "கறுப்பர்களை விட வெள்ளையர்கள் உயர்ந்தவர்கள் இல்லை, அரபியர்களை விட அரபி அல்லாதவர்கள் தாழ்ந்தவரும் இல்லை" என்னும் உலகளாவிய சமநிலைச் சமுதாயப் பிரகடனமாகும்.

ஒரு யூதரின் சடலத்தை சிலர் தூக்கிச் செல்லும் போது நபிகள் நாயகம் மரியாதை நிமித்தமாக எழுந்திருக்கிறார்கள். இதைப் பார்த்த நபித் தோழர்கள் "அது யூதரின் சடலமாயிற்றே? அதற்கா மரியாதை" என்று கேட்க "அவரும் ஆதாமுடைய மகன்தானே" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.



**அர்ஷாத் ஒமர்**

இன்றைய சிறுவர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள். இவர்கள் மனதினில் ஒற்றுமையின் விதையை விதைக்க வேண்டும். கத்தோலிக்கம், இந்து, இஸ்லாம், பௌத்தம் என நான்கு மத சிறார்களும், தமிழ், சிங்களம், பறங்கிய என மூன்று மொழி மூலங்களிலும் கல்வி கற்கும் மாணவர்களும் என புனித பேதுரு கல்லூரி வாழ்வாங்கு வாழ்கின்றது. மதங்கள் இறைவனிடம் எம்மை அழைத்துச் செல்லும் வழிமுறைகளே. எனவே எம்முள் எதற்கு சண்டை, சிறார்களாகிய நாம் கைகோர்த்து நாளைய நாட்டை நோக்கியே செல்லுவோம். சிறார்கள் நாமும் சிரித்து வாழ்வோம். பிறர் சிரிக்க வாழமாட்டோம். எம் கல்லூரி நாமம் காப்போம். எம் பெற்றோர் நாமம் ஓங்க வைப்போம். சிறுவர் தினத்தில் திடசங்கற்பம் கொள்வோம்.



# பேராசை தந்த மனமாற்றம்

## St. Guy of Anderlecht

பெல்ஜியம் நாட்டின் லாக்கன் நகரில் ஏழை ஒருவர் ஆலயத்தை சுத்தம் செய்வது, ஆலயத்தில் செபம் சொல்வது, திருப்பலிக்கு உதவுவது, அந்நகரில் உதவி தேவைப்படுபவருக்கு உதவுவது, ஆதரவற்றவர்களுக்குச் சேவை செய்வது போன்ற சாதாரண வேலைகளைச் செய்து வந்தார். இதனால் அவரை அவ்வூர் மக்கள் மிகவும் விரும்பினர். ஒரு நாள் ப்ரசல்லஸ் நகரிலிருந்து Laken நகருக்கு வியாபாரி ஒருவர் வந்தார். இவர் கப்பலில் சரக்கு ஏற்றுமதி செய்து செழிப்பாய் வாழ்ந்து வந்தவர். இவர் அந்த ஆலயப் பணியாளர் பற்றிக் கேள்விப்பட்டு அவரை சந்தித்து, உமக்கு இந்த ஊரில் நல்ல பெயர் இருக்கிறது. எனவே நான் எனது வணிகத்தில் உமக்கு ஒரு பங்கைத் தருகிறேன். வாரும் இருவரும் இணைந்து தொழில் செய்வோம் என்று அழைத்தார். அத்தொழிலில் ஆசை இருந்தாலும், ஆலயப் பணியை விட்டுவிட்டுச் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. தீர்மானம் எடுப்பதற்குச் சற்றே தடுமாறினார். எப்படியோ பேசி அந்த வியாபாரி அந்த மனிதரைத் தன்னோடு அழைத்தச் சென்றார். சில காலம் சென்று அந்த ஆலயப் பணியாளர் வாங்கிய பொருள்கள் முதன் முறையாக சரக்குக் கப்பலில் பயணிக்கத் தொடங்கின. ஏழையாக இருந்த அவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். ஆனால் அம்மகிழ்ச்சி நெடுநேரம் நீடிக்கவில்லை. கப்பல் அப்படியே சரக்கோடு துறைமுகத்திலேயே கடலில் மூழ்கியது. அப்போது அந்த ஆலயப் பணியாளர் பணத்தின்மீது பேராசை கொண்டு தவறு செய்துவிட்டேன் என மிகவும் மனம் வருந்தினார். தனது பேராசையினால் இறைவன் தன்னை தண்டித்துவிட்டதாக உணர்ந்து அழுது இறைவனிடம் மன்னிப்பு வேண்டினார்.

பின்னர் அத்தொழிலை கைவிட்டு மீண்டும் தனது பழைய இடத்துக்குச் சென்றார். ஆனால் அங்கு ஏற்கனவே வேறு ஒருவர் வேலைசெய்து வருவதைக் கண்டு தவமுயற்சியாக உரோமைக்கும் பின்னர் எருசலேமுக்கும் திருப்பயணம் மேற்கொண்டார். அவ்விடங்களில் திருப்பயணிகளுக்கு வழிகாட்டியாகப் பணிசெய்தார். பின்னர் தமது ஊரான Anderlechtக்குச் செல்லும் வழியில் 1012ஆம் ஆண்டில் காலமானார். இவர்தான் Anderlecht நகர் புனித Guy "Anderlechtன் ஏழை மனிதர்" எனவும் இப்புனிதர் அழைக்கப்படுகின்றார். கொம்பு உள்ள விலங்குகள், திருமணமாகாதவர்கள், வெறிநாய் கடித்தவர்கள், வலிப்பு நோயாளிகள், ஆலயப் பணியாளர்கள், குதிரையைக் கவனிப்பவர்கள் போன்றவர்களுக்குப் பாதுகாவலர். கி.பி 950ஆம் ஆண்டில் ஏழை விவசாயப் பெற்றோருக்குப் பிறந்த இவர் செபத்தில் ஆர்வம் கொண்டு சிறுவயதிலே தனது ஊரைவிட்டு லாக்கன் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு அவர் ஆலயத்தில் எப்போதும் செபித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த பங்குத் தந்தை அவருக்கு ஆலயத்தைப் பராமரிக்கும் பணிகளைக் கொடுத்தார்.




**அன்பின் சிறார்களே!**

இறை அன்பில் உங்களை வாழ்த்துகின்றேன். நாம் நான்காம் கற்பனை என்ன சொல்லுகின்றது என அறிந்து கொண்டோம். ஐந்தாவது கற்பனை கூறுகின்றது

**"கொலை செய்யாதே"** என்று

ஒரு நாள் ஓர் சிறுவன் ஒப்புரவு அருட்சாதனம் பெற அருட்தந்தை ஒருவரிடம் போனான். "சுவாமி நான் கொலை செய்துவிட்டேன்" என்றான் "யாரைக் கொலை செய்தாய்?" என்று கேட்டதற்கு "தவளையை" என்றான். பறவைகள், விலங்குகளைக் கொலை செய்வது பெரிய பாவமாகும். அதைவிடப் பெரிய பாவம் மனிதர்களைக் கொலை செய்வதாகும். நேரடியாகவும், சட்டத்திற்கு முரணாகவும் வேண்டுமென்று மற்றவரின் உயிரைப் பறிப்பது கொலையாகும்.

ஆயுதங்களால் கொலை செய்வது மட்டும் கொலையல்ல மற்றவர்களின் பெயரைக் கெடுப்பதும் கொலைதான். மற்றவர்களுக்கு எதிராக நாம் செயல்படுவதும் அவர்களை கொலை செய்வதற்கு அடையாளம். மனித உயிர் கடவுளின் கொடை. கடவுளுக்கு மட்டுமே அவ்வுயிரின் மீது முழு அதிகாரமும் உரிமையுயும் இருக்கிறது. வேறு எவருக்கும் மனித உயிரின் மீது அதிகாரம் இல்லை.

மனிதரைக் கடவுள் தமது சாயலாகப் படைத்துள்ளார். மனித உயிர் புனிதமானது. மனித இரத்தம் உயிரின் மூலம் எவரும் மற்றவருடைய இரத்தத்தை சிந்தலாகாது. ஒவ்வொரு மனிதரும் தனித்தன்மை உடையவர். அவரைப்போல் எவரும் அவருக்கு முன்னரும் இல்லை பின்னரும் இல்லை. மனிதன் கடவுளுடைய படைப்பின் சிகரம். எனவே அவனைக் கொலை செய்வது பாவம் மட்டுமல்ல, இறை நிந்தனையும் கூட.

### ஐந்தாம் கற்பனைக்கு மாறான செயல்கள்

- மனித கொலைகள், கருவழிப்பு, இரக்கக் கொலைகள், தற்கொலை மற்றும் மனித உயிருக்கு பாதிப்பான எல்லாச் செயல்களும் கொலையே.

மனித சமுதாயம் வாழ வேண்டுமென்றால் ஒவ்வொரு தனிநபரும் வாழ வேண்டும் எவரும் மற்றவரைத் தம் சொந்த அதிகாரத்தால் கொலை செய்ய முடியாது

**வினாக்கள்**

1. நாம் ஏன் கொலை செய்யக் கூடாது?
2. ஐந்தாம் கற்பனைக்கு எதிரான பாவங்கள் எவை?
3. மனித உயிரின் முக்கியத்துவம் பற்றி நீர் விளங்கிக் கொள்வது என்ன?

(இவ்வினாக்களுக்கு விடையை எழுதி அனுப்புங்கள்)

**ஆக்கம் : ஃபிறிஜுடியா ஸ்ரனிஸ்லோஸ்**
**கிளரேஷியன் அருட்சகோதரி**

## பாடசாலைகளுக்கிடையிலான கவிதைப் போட்டிகளில் முதலாமிடம் பெற்ற கவிதை



எப்படியெல்லாமோ
தன் பாசத்தை
உணர்த்துவாள் அம்மா
ஒரே ஒரு கையெழுத்தில்
எல்லாமே
உணர்த்துவார் அப்பா

பலர் என்னிடம்
கூறும் போதுதான்,
எனக்குத்
தெரியும்

யாருக்கும் கிடைக்காத,
தந்தை எனக்கு மட்டுமே,
கிடைத்திருக்கிறார் என...

முன்னால்
சொன்னதில்லை - பிறர்
சொல்லித்தான்
கேள்விப்பட்டிருக்கிறேன்
என்னைப் பற்றி
பெருமையாக

அப்பா பேசிக்
கொண்டிருந்ததை
அம்மா என்னை
எத்தனையோ
முறை திட்டினாலும்
உறைத்ததில்லை
- உடனே
உறைத்திருக்கிறது
என் அப்பா முகம்
வாடும் போதுதான்

*அப்பாவுக்காக...*

**யோ. ஜொப்பியான்**
**தரம் – 8T,**
**புனித பேதுரு கல்லூரி**

## விடுகதைகள்

1. பச்சை மாளிகைக்குள் சிவப்பு புதையல் அது என்ன?
2. சிவப்பு மாளிகைக்குள் வெள்ளை புதையல் அது என்ன?
3. தரையை சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யாா?
4. கால்கள் உண்டு நடக்கத் தெரியாது அது என்ன?
5. உயரே எறிந்தால் தரையில் விழுவான். தரையில் எறிந்தால் உயரே எழுவான் அவன் யார்?
6. கண்ணுக்கு தெரியாதவன் உயிர்க்கு உகந்தவன் அவன் யார்?
7. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்?
8. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார்?
9. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன?
10. வெள்ளை மாளிகைக்குள் கறுப்பு புதையல் அது என்ன?

**M.ஸ்டெலா தரம் – 7**
**புனித அந்தோனியார் மறைப்பாடசாலை**

*விடுகதையின் விடைகள் 15ஆம் பக்கம்*

## ஆசிரியர் தினம்

- "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது முதுமொழி
- கல்வி கண்கொடுத்து நம் வாழ்வில் ஒளி தருபவர் ஆசிரியர்
- அவர் சமுதாயத்தின் ஒளி விளக்காகத் திகழ்பவர்
- நல்லொழுக்கம், நல்லெண்ணம் கொண்டு நம் வாழ்வு வளமடைய ஏணிப்படிகளாய் விளங்குபவர் ஆசிரியர்
- ஆண்டுதோறும் ஐப்பசி 6ந் திகதி உலக ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- ஆசிரியர்களின் பணிகளைச் சமுதாயம் பாராட்டும் தினம் இதுவாகும்

**M. ஜனனி, தரம் 6 புதுக்கடைப்பங்கு**



## யார் இவர்?

- இவர் கி.பி 1503 முதல் கி.பி 1530 வரை வாழ்ந்தவர்
- மார்ட்டின் லூத்தர் காலத்தில் குருவாக இருந்தவர்
- திருச்சபையில் நிலவிய அவலங்களை நீக்கி, தமது புனித வாழ்வால் பலரை மனந்திருப்பியவர்
- புதுவைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்று ஏழைகளின் நோய்களை போக்கியவர்
- பர்னபைட்ஸ் என்ற துறவற சபையை இரு பாலருக்கும் நிறுவியவர்

**விடை : புனித அந்தோனி சக்கரியா**

## உலக நாடுகளின் தலை நகரங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை | கொழும்பு | 17. | தென்னாபிரிக்கா | பிரிட்டோரியா |
| 2. | இந்தியா | புதுடில்லி | 18. | இத்தாலி | வத்திக்கான் ரோம் |
| 3. | தீமோர் | டிலி | 19. | சுவிஸ்லாந்து | இம்பாவே |
| 4. | கமரூன் | யாவுண்டி | 20. | நியூசிலாந்து | வெலிங்டன் |
| 5. | கனடா | ஓட்டாவா | 21. | அவுஸ்ரேலியா | கனிபெரா |
| 6. | காம்பியா | பஞ்சல் | 22. | டெமினிக்கன் | ரொசியூ |
| 7. | காயானா | ஜோர்ச்டவுன் | 23. | மலேசியா | கோலாம்பூர் |
| 8. | சைபிரஸ் | நிகோசியா | 24. | பங்களாதேஷ் | டாக்கா |
| 9. | கானா | அக்ரா | 25. | மொசாம்பிக் | மம்புடோ |
| 10. | நோர்வே | ஒன்லோ | 26. | நைஜிரியா | அபுஜா |
| 11. | கியூபா | ஹவானா | 27. | ஐக்கிய இராச்சியம் | லண்டன் |
| 12. | ரஷ்யா | மொள்கோ | 28. | பாகிஸ்தான் | இஸ்லாமபாத் |
| 13. | ஜெர்மனி | பெர்பின் | 29. | புருனா | பண்டர் செரி பெகவன் |
| 14. | வெனிசுலா | காகான் | 30. | அமெரிக்கா | நியூயோர்க் |
| 15. | உகண்டா | கம்பாலா | | | |
| 16. | ருவாண்டா | கிகாலி | | | |

**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12**




ஜோன் கெனற், தரம் – 03, Atamie Interanational School, Kottehana






# பேராசை பேரழிவு!

## மாணவர்களே! ஒரு நிமிடம்

உலகை உருவாக்கி
மனிதர்களை உலவ
விட்டவர் இறைவன்.
தானே நிமிர்ந்து
நடைபயின்ற போது
முடிவுக்கு பாதை
அமைத்து உலக
வரைபடம் அமைத்தான்
மனிதன்.

ஆசையே துன்பத்திற்குக்
காரணம் என புத்தன்
போதி மரத்தடியில்
உணர்ந்து கொண்டார்.
ஆனால் ஆசையே
சாவின் வழித்தடம்
என விலக்கப்பட்ட
கனியின் சுவையினால்
உணர்ந்தான்
ஆதி மனிதன்.

தோழா! ஆசைக்காக
அகிலத்தையும் -
பண்பையும் அடகு
வைத்து இன்று நாகரீகத்
தொட்டில்களை உலகம்
முழுவதும் ஆடவிட்டான்
மனிதன். பேராசையே
உலகம் என்பதை
நம்பினான்.

ஆடைகள் சாதாரண
உடம்பினை
அடக்கம் செய்யும்
பழக்கமானது அன்று!
ஆடம்பர அகழியை
ஐக்கியமாக்கிக் கொண்டு
விட்டது இன்று

நண்பா! வாழ்வில்
அநியாயத்தை அறமாகக்
கொண்டவனுக்கு
சுயநலமே கோயிலாகவும்
வாழ்வை அறமாய்
பார்த்தவனுக்கு
மணமேடை புதை
குழியாகவும்
போய்விட்டது.

உலகில் அதிகாரத்தோடு
வாழ்பவனுக்கு
முடிவினில் அனாதையாய்
மரித்த நிலையும்
உண்டு!
அடக்கத்தோடு
வாழ்ந்தவனுக்கு
அகிலத்தையே
கலங்க வைத்த
இறுதி ஊர்வலமும்
உண்டுதானே!

தோழா! முதல்
நிகழ்விற்கு சிறந்த
உதாரணம் ஹிட்லர்.
இரண்டாவது நிகழ்விற்கு
சிறந்த உதாரணம்
முத்திப்பேறுபெற்ற
அன்னை தெரசா
அவர்கள்

வாழ்வில் ஒருவன் எப்படி
வாழ்ந்தான் என்பதை
அவன் இறுதி ஊர்வலம்
சான்று பகரும்! என்று
முன்னோர்கள் முன்னமே
உரைத்து விட்டனர்.

நண்பா! கல்லறையோடு
புதைந்தவரும் உண்டு,
கல்லறைக்கப்பால்
வாழ்ந்தவரும் உண்டு.
கல்லறையோடு
முடிப்பவன் சுயநலவாதி,
கல்லறைக்கப்பால்
வாழ்பவன் பொதுநலவாதி

தோழா! சுயநலத்தைச்
சொந்தமாக்கி
கல்லறையோடு
கரைந்துவிடும் வாழ்வு
வேண்டுமா? அல்லது
கல்லறைக்கப்பாலும்
நிலை கொண்ட வாழ்வு
வேண்டுமா?

நண்பா! சிந்தித்து
வாழ்வைச் சீராக
அமைத்துக்
கொள். சிந்தனை
இல்லை என்றால்
கல்லறையோடு வாழ்வை
முடக்கிக்கொள்! முற்றுப்
பெறுவதில் இல்லை
மனித வாழ்வு!

# விவிலியத்தில் குறிப்பிடப்படும் மலைகள் – 05

திருமறையில் சிறப்பான செய்தியாக உலக மக்களால் போற்றப்படுவதும், படிக்கப்படுவதும் மலைப்பிரசங்கம் என்னும் அருளுரையாகும். இதனை ஆங்கிலத்தில் "the sermon on the mount" என்றும் சொல்வார்கள். இது இலத்தீன் மொழியில் பீட்ஸ், பேறுபெற்றவர்கள் (Blessed) என்று அழைக்கப்படுகின்றது. இது பேரின்பம் பெற்றவர்கள் என்று பொருளைத் தருகின்றது.

இயேசு அருளுரை ஆற்றிய மலை டாப்கா (Tabgha) என்ற இடத்திற்கு அருகில் உள்ளது. இந்த மலை திபேரியாவிலிருந்து நாசரேத்துக்குப் போகும் வழியில் ஒன்றரை மணி நேரப் பயண தூரத்தில் வடமேற்கில் உள்ளது. கப்பர் நகூமுக்குச் சில மைல் தூரத்தில் வட்டமான வடிவத்தில், கலிலேயாக் கடலை நோக்கி அமைந்துள்ளது.

இம்மலைக்கு எல்லாத் திசைகளிலிருந்தும் மக்கள் வருகின்றனர். வரிசையாக நிழல் தரும் மரங்கள் அமைந்த, பசுமையான புல் தரையுள்ள காற்றோட்டமும், வெளிச்சமும் பொருந்திய அமைதியான இடமாகும். கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் அமைந்த மலையின் மேல் இயேசு அமர்ந்திருந்தார். அவருடைய சீடர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், வறுமையில் வாடியவர்களும் சமயத் தலைவர்களின் கடினமான கட்டளைகளால் ஒடுக்கப்பட்ட மக்களும், நோயாளர்களும் இயேசுவின் அருளுரையைக் கேட்கவும், நலம் பெறவும் திரளான கூட்டமாய் கூடியிருந்தனர். திரளான மக்கள் இருந்தும் முழு அமைதி காணப்பட்டது. அவருடைய வார்த்தைகளில் அன்பும், இரக்கமும், அனுதாபமும், மென்மையும், பெருந்தன்மையும், வல்லமையும் காணப்பட்டன.

## இயேசுவின் அருளுரை

எளிமை, துயரம், கனிவு, நீதியை நிலைநாட்டும் வேட்கை, இரக்கம், தூய்மை, அமைதி, நீதியின் பொருட்டுத் துன்பம் என எட்டுப் பண்புகளை உடையோர் பேரின்ப வாழ்விற்கு தகுதியுடையோர் என அருளுரையாற்றினார். (மத் 5:3-10)

தொழுகைக் கூடங்களில் போதகர்கள் அமர்ந்து போதனை செய்த அக்கால வழக்கத்தின்படியே இயேசுவும் திறந்த வெளியில் மேடான இடத்தில் அமர்ந்து, தன்னைச் சுற்றி இருந்த திரளான மக்களுக்கு அருளுரையாற்றினார். (லூக் 4:16)

இந்த அருளுரை மலையில் இயேசு அமர்ந்து அருளுரையாற்றிய இடம் அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

பொதுமறை என்று கூறப்படும் திருக்குறளின்



## அருளுரை மலை

கடவுள் வாழ்த்திலும் இந்த எட்டுப் பண்புகள் வலியுறுத்திக் கூறியிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

**“கோளில் பெறியில் குணமிலவே எண்
குணத்தான் தாளை வணங்காத் தலை”
(திருக்குறள் – 9)**

“எட்டுப் பண்புகளையுடைய இறைவனுடைய திருவடிகளை வணங்காவிடில், அவனுக்குக் குறிக்கோளுமில்லை, மெய், கண், மூக்கு, செவி, நா ஆகிய ஐந்து பொறிகள் இருந்தும் பயனில்லை. அவனிடம் நல்ல பண்புகளும் இரா” என்பது இக்குறட்பாவின் பொருளாகும்.

அருளுரை மலையில், சிறந்த எட்டுப் பண்புகளை விளக்கும் வகையில் தூய பிரான்சிஸ் அவர்களின் கட்டளையால், எட்டு வளைவுப் பக்கங்களைக் கொண்டு, கதிரவனின் ஒளி உள்ளே செல்லுமாறு எட்டுக் கண்ணாடிச் ஜன்னல்களைக் கொண்டு அமைந்த அழகான ஆலயம் பரந்த நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயப் பகுதியிலிருந்து கலிலேயா என்னும் திபேரியாக் கடலின் காட்சி வியக்கத்தக்கதாக அமைந்துள்ளது. இந்த ஆலயம் அழகான தோட்டங்கள் சூழ அமைந்துள்ளது. இவ்வாலயம் 1938ஆம் ஆண்டு பார்லூசி (Barluzzi) என்ற கட்டடக்கலை வல்லுநரால், அன்பான நியோ பைசான்டைன் (Neo Byzantine) என்பவரின் உதவியுடன் கட்டப்பட்டது. உலகின் பல பகுதிகளிலிருந்து வரும் பயணிகள் இவ்விடங்களைக் கண்டு வியந்து மகிழ்ந்து செல்கின்றனர்.

# கத்தோலிக்க திருமறை தரம் (11) (க.பொ.த) மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள்

விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. அ. அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் எப்போது, எங்கே பிறந்தார்?
   ஆ. திருத்தந்தை இரண்டாம் அருளப்பரின் பணிகள் மூன்றினை குறிப்பிடுக.
   இ. மக்ஸிமிலியன் கோள்பே அடிகளாரினுள் தூய ஆவியானவர் செயற்பட்ட விதத்தை ஐந்து வரிகளுக்கு குறையாமல் விபரிக்குக.
2. அ. கிறிஸ்தவ குடும்பம் ஒரு குட்டித் திருச்சபையாகும். எனக் கூறியவர் யார்?
   ஆ. சமூகத் திருவருட்சாதனங்கள் எவை?
   இ. பெற்றோர் தம் பிள்ளைகள் மட்டில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் 5 தருக.
3. அ. சென்மபாவத்தை அழிக்கும் அருட்சாதனம் எது?
   ஆ. ஆரம்பத் திருவருட்சாதனங்கள் எவை?
   இ. ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகும் ஒருவரிடம் இருக்க வேண்டிய ஆயத்த ஒழங்கு முறைகள் ஐந்தினை குறிப்பிடுக.
4. அ. பாஸ்கா மறைபொருள் என்றால் என்ன?
   ஆ. திருவழிபாட்டின் முக்கிய பகுதிகள் மூன்றினையும் தருக.
   இ. ஞாயிறு தினத்தை இறைவனின் நாளெனக் குறிப்பிட ஏதுவான காரணங்கள் 5 எழுதுக.
5. அ. நாம் சாதி, மதம், இனம் பாராது பிறருக்கு உதவி செய்யவேண்டும் என எடுத்துக்காட்டும் உவமை எது?
   ஆ. இறையரசை கட்டியெழுப்புவதற்கு எமக்கு தரப்பட்டுள்ள மூன்று வாழ்வுகளும் எவை?
   இ. உமது வகுப்பறையில் நீர் பிறர்மட்டில் செய்யும் செயற்பாடுகள் ஐந்தினை குறிப்பிடுக.
6. அ. “செபிக்க தெரியாதவனுக்கு வாழத் தெரியாது” எனக் கூறிய புனிதர் யார்?
   ஆ. ஒவ்வொரு மனிதனும் சொத்துசேர்க்க கூடிய நேரிய வழிவகைகள் மூன்றினை எழுதுக.
   இ. கிறிஸ்தவ விசுவாசி என்னும் வகையில் திருயாத்திரைத் தலங்கள் மட்டில் உமது பொறுப்புக்களை எழுதுக.
7. விரும்பிய இரண்டிற்கு மட்டும் சிறுகுறிப்பெழுதுக
   1. செபம்
   2. பத்துக்கட்டளைகள்
   3. சமூகத்தில் கிறிஸ்தவனின் கடமை
   4. அருளடையாளங்கள்

**விடைகள் 15ஆம் பக்கம்**

# சம்பவங்களும் சாதனைகளும்

## துணிவே துயர் துடைக்கும்

வாழ்வின் தொடக்கத்தில் பெரிய தீ விபத்தில் தன் தந்தையின் சொத்துக்களை எல்லாம் ஒருவர் இழந்தார். ஆண்டுதோறும் வருமானம் தந்து கொண்டிருந்த சொத்துக்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்துவிட்டது. கடுமையான வறுமையால் பாதிக்கப்பட்ட அந்த நபருக்கு கீல்வாதம் வந்து சொல்ல இயலாத வேதனைக்குத் தள்ளப்பட்டார். தொடர்ந்து சோதனையாக அவரது கண்களில் பார்வையை இழந்தார். எல்லாம் இழந்த நிலையிலும் நம்பிக்கையை மட்டும் அவர் இழக்கவில்லை. வேதனை சூழ்ந்த இந்த நிலையில் அவர் “இழந்த சொர்க்கம்” என்ற ஓர் இலக்கியத்தைப் படைத்தார். உலகின் புகழ்பெற்றவராக மாறினார். அவர்தான் கவிஞர் மில்டன்.

**வாழ்வில் தோல்வி கண்ட பலரும் வெற்றிக்கு ஒரு படி முன்னால்தான் தோற்றுப் போயிருப்பார்கள். எனவே இப்போதைய தோல்வி நமது வெற்றிக்கு ஒரு அடி முன்னால் இருப்பதாக எண்ணிக்கொண்டு தொடர்ந்து முயன்றால் மில்டன் போலச் சாதிக்கலாம்.**

**செல்வத்தை இழப்பவர் – நிறைய இழக்கிறான்.
தோழரை இழப்பவர் மிக அதிகமாக இழக்கிறார்.
துணிவை இழப்பவர் அனைத்தையும் இழக்கின்றார்**

**– மிக்யுல் சர்வாண்ட்ஸ்**




16

## ஆலய வரலாறுகள்

**பூவுலகில் வாழும் போதே புனிதையாகப் போற்றப்படுபவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அத்தகையோரில் முதன்மைப் பேறு பெற்றவர் அன்பின் வடிவமான அன்னை தெரேசா**

# அன்பின் திருவுருவம் அன்னை தெரேசா



## தல்கஸ்வலை ஆலயத்தில் திருவிழா

எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து இறுதியில் கல்கத்தா மாநகரில் தம் அரும்பணியை ஆரம்பித்து வறுமையில் உழன்றோர், முதுமை அடைந்தோர், நோயாளர், அநாதைக் குழந்தைகள் என எல்லோரையும் அரவணைத்து, வாழுங்காலத்திலேயே புனிதையாக வாழ்ந்தவர் தான் அன்னை தெரேசா. குட்டையான உருவம், முகத்தில் சுருக்கம், எப்போதும் நீலக் கோடுகளைக் கொண்ட தூய்மையை வெளிப்படுத்தும் வெண்நிற ஆடை, முகத்தில் எப்போதும் மாறாத புன்னகை என்பவற்றின் முழு வடிவம் முத்திப்பேறுபெற்ற அன்னை தெரேசா அவர்கள் என்றால் அது மிகையாகாது.

1910ஆம் ஆண்டு ஆவணி 26ந் திகதி அல்போனியா நாட்டின் ஸ்கோப்ஜே என்ற குக்கிராமத்தில் பொஜாஸியு டிரேன், நிக்கோலா தம்பதியினருக்கு கடைசி வாரிசாக அவதரித்தார் தெரேசா. திருமுழுக்கின் வழியே ஆக்னஸ் கோன்ஜா போஜாஜியோ என்ற இனிய நாமத்தை சூடிக்கொண்டார். எத்தனையோ சோதனைகளைத் தாங்கி, இறுதியில் கல்கத்தா வந்து சேர்ந்தார் அன்னை தெரேசா. கல்கத்தா மறைமாவட்ட திருச்சபை அன்னை உருவாக்கிய அன்பின் துறவற சபையை அங்கீகரித்தது. 1954ஆம் ஆண்டு ஐப்பசி 7ந் திகதி அச்சபையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார். அத்துடன் 1960ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது சபை கன்னியர்களை நாட்டின் பல பகுதிகளுக்கும் பணியாற்ற அனுப்பி வைத்தார்.

அன்பின் வடிவமாய் திகழ்ந்த அன்னை தெரேசா அவர்கள் 1997ஆம் ஆண்டு புரட்டாதி 5ஆம் திகதி இறைபதமடைந்தார். அவர் இவ்வுலகை விட்டுப் பிரியும்போது அவரின் வழியில் சராசரியாக 5000 அருட்சகோதரிகள் பணியாற்றினர். அத்துடன் உலகின் 123 நாடுகளில் அன்பின் துறவற சபை 713 கிளைகளைக் கொண்டிருந்தது. இத்தகைய மகிமை பொருந்திய அன்னை தெரேசாவுக்கு இலங்கையின் தெற்குப் பகுதியில், எழில் நிறைந்த சிறிய குன்றில் ஆலயம் ஒன்று எழுப்பப்பட்டது. இவ்வருடத்துடன் 4வது அகவையில் காலடி பதிக்கும் இவ்வாலயம் தனது வருடாந்தத் திருவிழாவை 28.09.2014 அன்று எளிய முறையில் கொண்டாடியது.

42 குடும்பங்களைக் கொண்ட தல்கஸ்வலை எனும் சிற்றூரில், தேயிலைக்கொழுந்து பறிக்கும் மற்றும் இறப்பர் பால் எடுக்கும் தொழிலாளர்களின் அயராத முயற்சியின் பயனாகவே இவ்வாலயம் கட்டி எழுப்பப்பட்டது. இது இவர்களுக்குக் கிடைத்த அரியதொரு வரப்பிரசாதம். ஏழ்மை நிலையில் தம்மால் முடிந்த வரை ஆலயத்தை நிறைவு செய்திருக்கின்றார்கள் இம்மக்கள். இவ்வருடம் கொழும்பிலிருந்தும் மக்கள் திருவிழாவில் பங்கெடுத்து சிறப்பித்தனர்.

**நன்றி வீரகேசரி வாரமலர்**

# இளைஞர்களின் வழிகாட்டி தோபியா



இளையோர் பக்கம்

அங்கம் - 63

## எக்பத்தானாவில் குடியேற்றம்

தந்தை, தாயின் இறப்புக்குப் பின்னர், தந்தையின் அறிவுரைக்கு இணங்கி தன் மனைவியுடன் புறப்பட்ட தோபியா, தன் மாமனார் - மாமியார் வாழ்ந்து கொண்டிருந்த எக்பத்தானாவிற்கு வந்தார். இது மேதியா நாட்டில் உள்ளது என்பதை முன்பு கண்டோம். தோபித்து தன்னுடைய இறுதி அறிவுரைப் பகுதியில் "பாபிலோன், அசீரியா ஆகியவற்றை விட மேதியா நாடு பாதுகாப்பாக இருக்கும்" (14:4) எனவும், "நினிவேயிலிருந்து புறப்படு, இங்கு தங்காதே... இந்நாட்டின் எல்லைக்குள் தங்காதே" என்று தன் மகனிடம் அறிவுறுத்தியிருந்தார். தந்தையின் அறிவுரைக்கு ஏற்ப, நினிவேயைவிட்டு மேதியா நாட்டில் வந்து குடியேறினார். தோபித்துவின் பார்வைப்படி நினிவே நகர் தீமை நிரம்பியதாகவும், அநீதி நிரம்பியதாகவும், பாவம் நிரம்பியதாகவும் மாறியது (14:9-10) எனவே, தன் மகனின் வாழ்வுக்கு மட்டுமல்ல, அவரின் குடும்ப வாழ்வுக்கும், பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் பயனற்ற நகராக நினிவே மாறிவிட்டது என்று கருதினார். ஆகவேதான் தம் மகனின் குடும்பம் வேறொரு நாட்டில் குடியேறி ஒழுக்கம் உள்ள குடும்பமாக வாழப் பணிக்கிறார்.

தோபித்துவின் உள்ளார்ந்த அறிவு-ரையை இன்றளவும் கடைப்பிடிக்கும் பல்வேறு குடும்பங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் காப்பாற்ற முடியும். பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் பயன்படாத ஒரு கலாச்சாரச் சீரழிவைக் கண்டார். அவர்கள் ஒழுக்கமுடன் வளர, இயலாத அறநெறிச் சீரழிவையும் கண்டார். அவர்கள் சமய பற்றுடன் வளர, வாழ இயலாத சமயச் சீரழிவையும் கண்டார். எனவேதான், தோபித்து தன் மகன் குடும்பத்தை நினிவே நகரிலிருந்து அழைத்துக் கொண்டு வேறொரு நகரில் சென்று குடியேற அறிவுறுத்-துகின்றார். பல்வேறு சீரழிவுகள் மத்தியில் வளரும் குழந்தைகள், பிள்ளைகள் தங்க-ளுடைய எதிர்காலத்தை சீரழித்துக் கொள்கின்-றார்கள். மாறாக, தோபியா போன்று மதிநுட்பத்தோடு தந்தையின் அறிவுரையை கேட்டு இடம்பெயர்ந்து வாழும்போது நல்ல சூழல் இருக்கக்கூடிய இடங்களில் சென்று குடியேறும்போது, நல்-வாழ்க்கை அமைகிறது.

தோபியா தந்தையின் அறிவுரைக்கு ஏற்ப புறப்பட்டு மேதியா நாட்டில் வந்து குடியேறுகிறார். எனினும் தன் தந்தை கூறாத மற்றொரு மிகப்பெரிய நற்செயலையும் தோபியா செய்கின்றார். அது என்ன? மேதியா நாட்டில் குடியேற வந்தவர் எக்பத்தானாவில் வந்து குடியேறினார். இங்குதான் சாராவின் முதிய வயது பெற்-றோர் வாழ்ந்து கொண்டி-ருந்தனர். வேறு எந்த ஒரு குழந்தையின் ஆதரவும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் சாராவின் பெற்றோர் இல்லம் வந்து அவர்க-ளோடு தங்குகிறார். முதிய வயதில் வாழும் மாமனார் மாமியாருக்கு உதவிடும் நோக்கோடு அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் வகையில் அவர்களோடு வந்து தங்குகின்றார். தோபியாவின் நல் முடிவு சாராவுக்கு மிகுந்த மகிழ்ச்சி தந்திருக்க வேண்டும்.

### சிறந்த மருமகனாக தோபியா

எக்பத்தானாவில் இரகுவேலுடன் வாழ்ந்தார் (14:12) எனவும் தன் மனைவியின் வயது முதிர்ந்த பெற்றோரை மரியாதையுடன் பேணி வந்தார் (14:13) எனவும் நூலின் ஆசிரியர் மிகச் சுருக்கமாக அவர்களது பல ஆண்டு கால வாழ்க்கையை எழுதுகிறார்.

உண்மையான நல் உறவு கொண்டிருந்-தது நல்ல குடும்பத்தின் கதையை எழுதும்போது, ஓரிரு வார்த்தைகளில் ஆசிரியர் இப்படிக் குறிப்பிடுகின்றார். "மரியாதையுடன் பேணி வந்தார்". தோபியா தன் மாமனார் - மாமியார் இருவரையும் தன்னுடைய பெற்றோரைப் போன்று அன்பு செய்தார். சொற்களாலும், செயல்களாலும் அவர்களைப் புண்படுத்தும் விதத்தில் நடந்திருக்கமாட்டார். எப்படி தன் தந்தை தோபித்து, தாய் அன்னாவுக்கு மரியாதை செலுத்தி, அன்பு காட்டி, அவர்களின் முதிய வயதில் அக்கறையோடு கவனித்தாரோ, அதுபோன்றே தன் மனைவி சாராவின் பெற்றோரையும் மதித்துக் போற்றி அன்பு செய்து வந்தார். மாமனார் இரகுவேலும் - அவர் மனைவியும் இறந்த பின்னர் மேதியாவில் அவர்களை நல்லடக்கம் செய்தார் (14:13). இரகுவேலின் இறப்பிற்குப் பிறகு அவருடைய சொத்துக்கள் அனைத்தும் தோபியாவிற்கு சொந்தமானது. அவர் தன் தந்தையின் சொத்துக்கும், மாமனார் வழிவந்த சொத்துக்கும் உரிமையாளர் ஆனார் (14:13) இதன் பிறகு என்ன நடந்தது என்பதைப் பற்றி நூல் ஆசிரியர் விவரிக்கவில்லை. ஆனால் பின்வருமாறு எழுதுகிறார், "மக்களின் மதிப்புக்குரியவராய்த் தம் நூற்றுப் பதினேழாம் வயதில் இறந்தார்" (14:14) "மக்களின் மதிப்புக்குரிய" வாழ்க்கை என்று குறிப்பிடுகையில் அவர் எல்லா வகையிலும் நேர்மையாளராக வாழ்ந்தார் எனவும், அவரின்பிள்ளைகளும் நல்ல ஒழுக்கமுள்ள-வர்களாக, உண்மை-யுள்ளவர்களாக வாழ்ந்தார்கள் எனவும் ஊகிக்க இயலும்.

"தந்தை தாயின்" பெருமையும் மதிப்பும் அவர்களின் பிள்ளைகள் வழியாக வருகின்றது. தோபியாவின் பிள்ளை-கள் - எத்தனைபேர் இருந்தனர் எனத் தெரியாது. தந்தை-க்குப் பெருமை சேர்க்கும் வகையில் வாழ்ந்திருந்தனர்...

*தொடர்ச்சி 15அம் பக்கம்*

“ நாம் பிறரை தாக்கும் போது அவரையல்ல நம்மையும் பிறரையும் அன்பு செய்யும் இயேசுவைத் தாக்குகிறோம். “இன்றும் இரத்தம் சிந்துவோர் அடிபடுவோர், வதைக்கப்படுவோர், ஒடுக்கப்படுவோர் மத்தியில் இயேசுவும் துன்புறுகின்றார் ”



# அமைதியை நாடுவோம் அவனியைக் காப்போம்

அருட்சகோதரர். ஜெ. செல்வா.

மனிதன் தன் வாழ்நாளில் அமைதியைத் தேடி நாளெல்லாம் அலைகிறான். அவன் அமைதியை இழப்பதற்குக் காரணம் பல்வேறு கோணங்களிலிருந்து பிரச்சினை வருவதால் அவைகளில் சில சமூகத்தினால், குடும்பத்தினால், சமயத்தால், சந்திக்கின்ற தீய மனிதர்களினால், இன்னும் பல காரணத்தாலும் வருபவை. இதனால் மனிதன் அமைதியை இழந்து தவிக்கின்றான். அமைதியை அடைய அவன் பின்பற்றும் உலக வழிமுறைகள் அமைதி தருபவை அல்ல என்பதை அறியாது போகின்றான்.

**“உங்கள் வாழ்க்கையிலே அமைதியிருக்கிறதா?” என்று ஒரு சிலரிடம் கேட்டபோது அவர்கள் அளித்த பதில் இதோ....**

**ஒரு குடும்பத் தலைவி :** “என் கணவர் சாதிக் கலவரத்தில் ஈடுபட்டு கைதாகி சிறையில் அடைக்கப்பட்டதால் நல்லா இருந்த என் குடும்பத்தில் அமைதி பறிபோய்விட்டது”

**அப்பாவை இழந்து தவிக்கும் இரண்டு குழந்தைகள்:** “யார் சண்டை போட்டாலும் எங்கள் கிராமத்தில் தட்டிக் கேட்பது எங்கள் அப்பாதான். ஆனால் மதக் கலவரத்தின்போது நல்லவரான எங்க அப்பாவை மதவெறிக் கும்பல் வெட்டி சாய்த்து விட்டது. நாங்கள் இப்போது அனாதைகள்”

**ஒருநோயாளியின்பாவஅறிக்கை:** “மதுபானம், சிகரெட், கஞ்சா, விபச்சாரம், புகையிலை போன்ற தீய பழக்கத்திற்கு அடிமையானதால் என் உடல் கெட்டுப்போனது. இப்போது நான் ஆஸ்பத்திரிக்கும், வீட்டிற்கும் அலையாய் அலைந்து கொண்டிருக்கின்றேன்”

**வேலை இழந்த ஒரு அரச அலுவலரின் கண்ணீர் கதை :** “குறுக்கு வழியில் முன்னேற வேண்டும் என்பதற்காக அலுவலகத்தில் லஞ்சம் வாங்கினேன். அதுமட்டுமன்றி அரசு பணத்தையும் திருடினேன். வேலை இழந்து மன நிம்மதியின்றி தவிக்கிறேன். நீதிமன்றத்திற்கும் வீட்டிற்கும் நடையாய் நடந்து கொண்டிருக்கின்றேன்”

**பள்ளியில் இரு மாணவர்கள் சண்டை போடும் போது அதை வேடிக்கைப் பார்க்கும் மாணவர்கள் சொல்லும் உற்சாக வார்த்தைகள்....**

“காலைப்பிடித்து வாரிவிடு”
“சட்டையைப் பிடித்து கிழி”
“ணங் ணங் என்று முதுகில் குத்து”
”முடிந்தால் அவனைத் தீர்த்துக் கட்டு”

சிறு வயதில் மாணவப் பருவத்தில் ஏற்படும் இத்தகைய அனுபவங்கள் தான் பெரிய நபராக வளர வளர மாணவர்களை கலவரக்காரர்களாக, வெறிபிடித்தவர்களாக மாற்றி விடுகின்றது.

“நீங்கள் ஒருவரையொருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள்” (கலா 5:15) என விவிலியம் எச்சரிப்பதை மறந்து போகக் கூடாது.

இரு மாணவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் தரக்குறைவாக பேசி, கல்லால் எறிந்து தாக்கிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட தோமினிக் சாவியோ என்ற இளைஞன் சண்டை போடுவதை நிறுத்தும்படி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் அவர்கள் அதை கேட்கவில்லை. உடனே அவர், அவர்கள் நடுவில் சென்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை உயர்த்திப் பிடித்து “இதோ இவர்மேல் கல் எறியுங்கள்” என்றார். உடனே இருவரும் தாக்குவதை நிறுத்தினர். தாங்கள் செய்யும் செயல் அவமானத்திற்கு உரியது என்பதை உணர்ந்தனர். மீண்டும் சமாதானம் செய்து கொண்டனர். நாம் பிறரை தாக்கும் போது அவரையல்ல நம்மையும் பிறரையும் அன்பு செய்யும் இயேசுவைத் தாக்குகிறோம். “இன்றும் இரத்தம் சிந்துவோர் அடிபடுவோர், வதைக்கப்படுவோர், ஒடுக்கப்படுவோர் மத்தியில் இயேசுவும் துன்புறுகின்றார்”

## அமைதியின் மன்னன்

அமைதி என்பது முழுமையான நலமும் பாதுகாப்பும் அடங்கிய நிலையாகும். இந்த அமைதி என்பது பைபிளில் ஷலோம், சாந்தி, சமாதானம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசுவின் பிறப்பின்போது ஆட்டுக் கிடையை காவல் காத்துக்கொண்டிருந்த இடையர்களுக்கு தேவதூதர்கள் விண்ணில் தோன்றி இயேசு பிறந்த மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை அறிவித்து **“உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகிலே அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!”** (லூக் 2:14) என்று கடவுளைப் புகழ்ந்து பாடிய பாடலில் அமைதிக்கான வழிமுறைகள் இருப்பதைக் காணலாம்.

இயேசுவின் பிறப்பு அமைதியைக் கொணர்ந்தது எனவும், அவருடைய வாழ்வு அமைதியை நிலைநாட்டியது எனவும், அமைதியின் மகத்துவமும், முக்கியத்துவமும் என்ன என்பதை அவர் வெளிப்படுத்தியதையும் நாம் அறிகின்றோம். ஆகவே தான் நாம் அவரை **“அமைதியின் மன்னன்”** (The Prince of Peace) என்று சொல்கின்றோம்.

## தனி மனித வாழ்வில் அமைதி

தனி மனித வாழ்வில் பல்வேறு பிரச்சினையால் இன்று மனிதன் அமைதியை இழந்து தவிக்கிறான். வறுமை, பகைமை, போட்டி, பொறாமை போன்ற மன வேதனையால் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மனிதனுடைய ஆளுமை பாதிக்கப்படுகின்றது. இதனால் அவனுடைய அமைதி பறிபோகின்றது. இதனால் வாழவே வழி இல்லை என எண்ணி தற்கொலையும் செய்து கொள்கிறான்.

**“தீயோர்க்கு அமைதியில்லை”** (எசா 48:22) என்கிறது விவிலியம். 12 ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் பாதிக்கப்பட்டு மன அமைதியிழந்து தவித்த பெண்ணை இயேசு குணப்படுத்திய பின்னர் சொன்ன வார்த்தை **“அமைதியுடன் போ... நோய் நீங்கி நலமாயிரு”** (மாற் 5:34) அன்று மட்டுமல்லஇன்றும் இயேசு ஒவ்வொரு மனிதனையும் நோக்கி இவ்வாறு கூறுகின்றார்.

**“அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கின்றேன். என் அமைதியை உங்களுக்கு அளிக்கின்றேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றதல்ல”** (யோவா 14:27) உங்கள் கவலைகளையெல்லாம் ஆண்டவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். (1பேது 5:7) என்ற ஆறுதலளிக்கும் இறைவார்த்தைகளை இதயத்தில் பதிய வைப்போம்.

## குடும்ப வாழ்வில் அமைதி

ஒவ்வொரு குடும்பமும் அமைதியில் வாழ வேண்டும் என்பதை...

**“கணவனையும், மனைவியையும் ஒன்றாக இணைத்தவர் கடவுளே. வாழ்வின் ஆவியும் அவரே. தம் மக்களாக, குழந்தைகளாக, இவர்கள் வாழ வேண்டும் என்பதே அவரின் நாட்டம்”** (மலாக் 2:15) என்று விவிலியம் சொல்கிறது.

**“கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்”** என்ற திருமண உடன்பாட்டை கிறிஸ்து தெளிவுபடக் கூறுகிறார். ஆனால் இன்று வரதட்சனை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின்மை, ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளாத நிலை, சந்தேகம், பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படியாமை, பெற்றோர்கள் பிள்ளைகளை புரிந்து கொள்ளாத தன்மை, சிசுக்கொலை, கடன்பாரம், மனவைராக்கியம், நோய்கள், குடிவெறி, ஆடம்பர மோகம், சூதாட்டம், சுரண்டல், வறுமை போன்றவைகள் குடும்ப வாழ்வில் அமைதியை சீர் குலைக்கின்றது.

அன்பார்ந்த சகோதர சகோதரியே உன் வாழ்வில் ஏற்படும் அச்சம், சோர்வு, பயம், எதிர்காலத்தைப்பற்றிய கவலை, குற்ற உணர்வு போன்றவைகள் உன் மன அமைதியைக் குறைக்கலாம். ஆனால் இயேசுவைத் தேடுகிற, நாடுகிற, கண்டடைகிற யாரும் அவர் தரும் அமைதி பெறாமல் போகமாட்டார்கள். **“எனவே கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக!”** (கொலோ 3:15)

## சமூகத்தில் அமைதி

எல்லைக்கோடு தகராறுகள், இன, மொழி, நிற மத வேறுபாடுகள், நதி நீர் பங்கீடுகள், போர் வெறி, அணு ஆயுதப் போட்டி, மூன்றாம் உலகப்போர் நிகழலாம்” என்பவை மனிதனுக்கு அச்சத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

இன்றைய நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் உலகை ஒரு கிராமம் போல் மாற்றினாலும் மனிதனின் நல்ல பண்புகள், மனித மாண்புகள் சிதைக்கப்பட்டு அன்றாடம் ஆயிரக்கணக்கான மக்கள் அழிந்து கொண்டே இருக்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இயேசு பிறந்த பெருவிழாவை கொண்டாடும் வேளையில் மகாத்மா காந்தி, இராதா கிருஷ்ணன், விவேகானந்தர் போன்றோரைக் கவர்ந்த மலைப்போதனையில் இயேசு உலக மக்களை நோக்கி அமைதிக்காக அழைப்புக் கொடுத்ததை ஒவ்வொரு மானிடனும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**“அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்”** (மத் 5:9) எனவே கடவுளின் மக்களாக வாழ விரும்புவோம். அமைதியை நாடுவோம். அடிமைத்தனங்களிலிருந்தும் பல்வேறு வெறித்தனங்களிலிருந்தும் இந்த அவனியைக் காக்க உறுதி எடுப்போம். இயேசுவே நம் அமைதி அவர் நம் இதயங்களுக்கும், இல்லங்களுக்கும் சமூகத்திற்கும், உலகிற்கும் அமைதியைத் தருவராக.

அமைதியின் அண்ணல் என்று அழைக்கப்படுகின்ற புனித பிரான்சிஸ் அசீசியின் அமைதிக்கான செபம் நம் வாழ்வாக மாறுவதாக.

## அமைதியின் செபம்

**ஆண்டவரே!**
**உமது அமைதியின் கருவியாய்**
**எனை உருவாக்கிடுவீர்.**
**பகையுள்ள இடத்தில் அன்பையும்,**
**தீங்கு விளையுமிடத்தில் மன்னிப்பையும்,**
**சந்தேகம் எழுமிடத்தில் விசுவாசத்தையும்.**
**மனம் தளருமிடத்தில் நம்பிக்கையும்,**
**இருள் நிறையுமிடத்தில் அருள் ஒளியையும்,**
**கவலை வாட்டுமிடத்தில் மன மகிழ்வையும்**
**நான் விதைக்கச் செய்வீர்**
**திவ்விய குருவே**

**நான் ஆறுதல் பெறவன்று ஆறுதலளிக்க,**
**புரிந்து கொள்ளப்படுவதற்கன்று**
**புரிந்து கொள்ள,**
**அன்பைப் பெறவன்று அன்பு செய்ய**
**வரம் தருவீர்.**
**ஏனெனில் ஈவதால் நாம் பெறுகின்றோம்.**
**மன்னிப்பதால் மன்னிப்படைகின்றோம்.**
**இறப்பதால் முடிவில்லா வாழ்விற்குப்**
**பிறக்கின்றோம்.**
**ஆமென்**

# மதத்தின் பெயரால் வன்முறையை நியாயப்படுத்தாதீர்கள் – திருத்தந்தை






மதத்தின் பெயரால் வன்முறையை நியாயப்படுத்தாதீர்கள், வன்முறையையும், அடக்கு முறைகளையும் பயன்படுத்தம் எந்த ஒரு சமயக் குழுவும் கடவுளின் சேனை என, தன்னை அறிவிக்க முடியாது எனக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். அருளாளர் அன்னை தெரேசா பிறந்த பூமியான அல்போனியாவில், தனது ஒரு நாள் திருப்பயணத்தை, அதுவும், 11மணி நேரங்களே நடத்திய திருப்பயணத்தில் ஞாயிறு மாலையில் பல்சமயப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாற்றியபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். கடவுளின் பெயரால் கொலை செய்வது கடவுளுக்கு இழைக்கும் கடும் துரோகமாகும். மக்களை, கடவுளின் பெயரால் பாகுபடுத்துவது மனிதப்பண்பற்ற செயலாகும் என்று கூறினார். பல ஆண்டுகள் கம்யூனிச அடக்குமுறைக்கு உள்ளான அல்போனியாவில் தற்போது மத சுதந்திரம் வழங்கப்பட்டு அனைத்து மதத்தினரும் அமைதியிலும் நல்லிணக்கத்திலும் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலை உலகுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் இருக்கின்றது என்று பாராட்டி, இந்நிலையில் தொடர்ந்து வாழுமாறு திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

பால்கன் நாடாகிய அல்போனியாவில் 59 விழுக்காட்டினர் முஸ்லிம்கள். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அல்போனியத் திருப்பயணத்தை நிறைவுசெய்து திரும்பிய விமானப் பயணத்தில், அல்போனியாவில் உடன்பிறந்தோர் உணர்வைக் கட்டியெழுப்பும் சக்திபடைத்த உயர்வான கலாச்சாரம் இருக்கின்றது என்று கூறினார்.

அல்போனியத் தலைநகர் திரானா பேராலயத்தில் ஆயிரக்கணக்கான அருள்பணியாளர்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினருடன் திருத்-தந்தை திருப்புகழ்மாலை செபித்தபோது 84 வயது அருள்பணியாளர் Ernest Troshani Simoni, 85 வயது அருள்சகோதரி Maria Kaleta ஆகிய இருவரும் தங்களின் சிறைவாழ்வு அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இச்சகோதரி ஐந்து காயம் வரம் பெற்றவர். அருள்பணியாளர் Ernest Troshani Simoni, பேசுகையில், எனது மணிக்கட்டுக்களை இரும்புக் கைவிலங்குகளால் இறுக்கி ஏறக்குறைய நான் இறக்கும் நிலையில் கீழே தள்ளிவிட்டனர். வதைப்போர் தொழில் முகாம்களில் வேலைசெய்ய வைத்தனர். எனக்கு வாழ்வென்பது கிறிஸ்துவே என்று எனது சிறைச் சுவரில் எழுதி வைத்திருந்தேன். கிறிஸ்து பற்றிப் பேசுவதை நான் நிறுத்தவில்லை என்று சொல்லி ஏறக்குறைய நான் இறக்கும் நிலை வரும்வரை சித்திரவதைப்படுத்தினர். நிறைய அருள்பணியாளர்கள் விசுவாசத்திற்காகக் கொல்லப்பட்டனர் என்றார். இவ்வாறு இவர் தனது அனுபவங்களைக் கூறியபோது திருத்தந்தை எழுந்து சென்று அக்குருவின் கைகளை முத்தமிட்டு அவரது நெற்றியில் தனது நெற்றியை சிறிதுநேரம் வைத்துக்கொண்டு அமைதியாக நின்றார். பின்னர் 85 வயது அருள்சகோதரி Maria Kaleta பல ஆண்டுகள் வதைப்போர் தொழில் முகாம்களில் தண்டனை அனுபவித்தது பற்றி விளக்கினார். தனது துறவு இல்லம் மூடப்பட்ட போது எதிர்கொண்ட துன்பங்களையும், தனது சிறை வாழ்வில், கொலைக்கு அஞ்சாமல், தாய்மாரின் வேண்டுகோளின் பேரில் குழந்தைகளுக்கு திருமுழுக்கு அளித்ததையும், திருப்பலியில் கலந்துகொள்ள வேண்டுமென்று பல ஆண்டுகளாக ஆவலாக இருந்ததையும் விவரித்தார்.

அல்போனியாவின் 50 வருட கம்யூனிச ஆட்சியில் பல துன்பவியல் நிகழ்வுகள் நடந்துள்ளன. இச்செப வழிபாட்டில் மறையுரையாற்றுவதற்கென ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த உரையை ஒதுக்கி வைத்துவிட்டு, அந்நேரத்தில் எழுந்த தனது மன உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். இதற்குப் பின்னர் திரானா, பெத்தனி மையத்தில் வாழும் சிறாரையும் சந்தித்தார். உதவி தேவைப்படும் மாற்றுத்திறானாளிகள் மற்றும் கைவிடப்பட்ட சிறார் பராமரிக்கப்படும் இந்த மையமானது, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தன்னார்வப் பணியாளர்களால் நடாத்தப்படுகின்றது. இச்சந்திப்பை முடித்து திரானா அனைத்துலக முத்திபேறுபெற்ற அன்னை தெரேசா விமான நிலையத்தில் அல்பேனியப் பிரதமர் எடி ராமா அவர்களுடன் சிறிதுநேரம் பேசிய பின்னர் உரோமைக்குப் புறப்பட்டார்.

1908ஆம் ஆண்டு முதல் 1958ஆம் ஆண்டுவரை அல்போனியாவில் சர்வதிகார ஆட்சி செய்த அதிபர் என்வர் ஹோகூஷாவின் ஆட்சி அந்நாட்டை மறைசாட்சிகளின் பூமியாக மாற்றியது ஆனால் இன்று உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அந்நாட்டில் பல சமயத்தவர் ஒன்றுசேர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இறைநம்பிக்கை நம்மை ஒருபோதும் ஏமாற்றாது என்பதற்கு இந்நாடு சான்றாக உள்ளது. நன்மை, தீமையை வெற்றிகொள்ளும் என்பதை திருத்தந்தையின் இப்பயணம் வலியுறுத்துகின்றது. இந்நாடு ஐரோப்பிய சமுதாய அவையில் முழு உறுப்பினர் ஆவதற்கு முயற்சித்து வருகின்றது. இம்முயற்சி திருவினையாகட்டும். நம்பிக்கை, நம்மை ஒருபோதும் ஏமாற்றாது. வருங்காலத்தை நம்பிக்யையோடு நோக்குங்கள், தனி மனிதக் கோட்பாட்டின் வெற்று வாக்குறுதிகளும், தன்னலமும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியாது என அல்பேனிய இளையோருக்கு நினைவுபடுத்தினார் திருத்தந்தை. இந்த ஒரு நம்பிக்கையையும், ஊக்கத்தையும் திருத்தந்தையிடமிருந்து பெற்றுள்ள வருங்கால அல்பேனியாவுக்கு மேலும் ஒளிமயமான எதிர்காலம் அமையட்டும் என வாழ்த்துவோம்.

மதத்தின் பெயரால் வன்முறையை நியாயப்படுத்தாதீர்கள், வன்முறையையும், அடக்கு முறைகளையும் பயன்படுத்தம் எந்த ஒரு சமயக் குழுவும் கடவுளின் சேனை என, தன்னை அறிவிக்க இயலாது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அல்பேனியாவில் கூறியவை,

**எட்ட வேண்டிய இதயங்களை எட்டித் தொடட்டும்.**

# பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு பாராட்டுகின்ற மனப்பக்குவம் வேண்டும்



– சர்வ சமய தேசிய மாநாட்டில் தமிழ் நேசன் அடிகளார் –

நாம் வாழும் நாடு பல்லின, பல்சமய, பல்பண்பாட்டு அம்சங்களைக்கொண்ட ஒரு நாடு. இந்தப் பன்முகத்தன்மையை (Pluralism) ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் வேண்டும். பல்வகை இனங்கள், மதங்கள், மொழிகள், கொள்கைகள், பண்பாடுகள் ஒரு நாட்டிற்கு அழகையும், வளத்தையும், பலத்தையும் கொடுக்கின்றன. இவற்றை அச்சுறுத்தலாகவோ, ஆபத்தாகவோ பார்க்கக்கூடாது. பன்முகத்தன்மையின் அழகை இரசிக்கத் தெரியாதவர்கள் மனநோயாளிகளே அன்றி வேறு யாருமல்ல.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் முறைமை சார்பு ஆய்வு நிலையத்தில் இடம்பெற்ற சர்வ சமய தேசிய மாநாட்டில் (Inter Religious National Symposium) கலந்துகொண்டு உரையாற்றியபோதே மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் இயக்குனரும், மன்னா பத்திரிகையின் ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்கம் மற்றும் மன்னார் சர்வமதப் பேரவை ஆகியவற்றின் தலைவருமான அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார். இந்நிகழ்வில் இலங்கையின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த சர்வமதத் தலைவர்களும் மற்றும் அமெரிக்க நாட்டின் இலங்கைக்கான தூதுவர், நோர்வே நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். தமிழ் நேசன் அடிகளார் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது,

ஒரு தோட்டத்தில் ஒரே வகையான மலர்கள் மட்டும் இருந்தால் அது அழகான தோட்டமாக இருக்க முடியுமா? எப்படியாக பல்வகை மலர்கள் ஒரு தோட்டத்தை அழகு செய்கின்றனவோ அதுபோன்றே ஒரு நாட்டில் பல்வகை இனங்கள், மதங்கள், மொழிகள், கொள்கைகள், பண்பாடுகள் ஒரு நாட்டிற்கு அழகையும், வளத்தையும், பலத்தையும் கொடுகின்றன. இந்த அழகை இரசிக்கத் தெரியாதவர்கள் உண்மையில் மனநோயாளிகளாகத்தான் இருக்க முடியும்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொன்னார். அதாவது "எல்லா ஊரும் என்னுடைய ஊரே, எல்லா மக்களும் என்னுடைய உறவினர்களே" என்றார். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் சமூகத்தில் விளங்கிய உலகளாவிய சகோதரத்துவ (Universal Brotherhood) சிந்தனை நமக்கு ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது. சமாதானம், சகோதரத்துவம், நல்லிணக்கம் தொடர்பாக எனது நிலைப்பாடு என்ன? என்று நாம் ஒவ்வொருவரும் நம்மையே நாம் கேட்டுப் பார்க்க வேண்டும். நமது உள்ளத்தில் நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்காத சமாதானத்தை, சகோதரத்துவத்தை, நல்லிணக்கத்தை நாம் வெளியில் தேடமுடியாது என்றார்.

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தினால் நடாத்தப்பட்ட திருவழிபாட்டுக் கருத்தரங்கு



"நம்பிக்கை கொண்டோர் உண்மையான கிறிஸ்தவ உணர்வை பெற்றுக்கொள்வதற்கு முதன்மையானதும் இன்றியமையாததுமான ஊற்றே திருவழிபாடு" என்ற தலைப்பில் கடந்த புரட்டாதி மாதம் 7, 8ஆம் திகதிகளில் தேவத்தையில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இதில் கொழும்பு உயிர் மறைமாவட்ட பங்குகளின் பிரதிநிதிகள் உட்பட மொத்தமாக 40 பேர் பங்குபற்றினர். விசுவாசம், நம்பிக்கை, பழைய, புதிய ஏற்பாடு பலிகளும் எமது பலிகளும், ஆகிவற்றைப் பற்றி அருட்தந்தை. இக்னேஷியஸ் அவர்களும், திருவழிபாடு பற்றிய கருத்துக்களையும், பரிசுத்த திருப்பலியின் வடிவமைப்பு பற்றியும் அருட்தந்தை அந்திரியாஸ் அவர்களும் விரிவுரைகளை ஆற்றினார்கள். இரு தினங்களிலும் திருப்பலியும், கேள்வி பதில் கலந்துரையாடல்களும் நடைபெற்றது சிறப்பம்சமாகும்.

திருவழிபாடு பற்றிய விழிப்புணர்வற்ற வகையில் தங்களின் விருப்பப்படி வழிப்பாடுகளை நடத்தும் இக்காலகட்டத்தில் இவ்வாறான கருத்தாழமுள்ள கருத்தரங்குகள் நடைபெறுவது மக்கள் அனைவரும் உண்மையில் இறைவனை சந்திக்க வாய்ப்பளித்தது வரவேற்கத்தக்க விடயமாகும். தேசிய வழிபாட்டு இயக்குனர் அருட்தந்தை. இக்னேஷியஸ் அடிகளாருக்கும், அருட்தந்தை. அந்திரியாஸ் அடிகளாருக்கும், கொழும்பு மறைமாவட்ட திருவழிபாட்டு இயக்குனர் அருட்தந்தை. இந்திரஜித் பெரேரா அடிகளாருக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

**தகவல் : கிறிஸ்டினா அன்ரன்**

## 2ம் பக்கம் – குறு நாடக செயலமர்வு...

நிபந்தனைகள்

- 16-35 வயதுக்குள் உட்பட இளைஞர் யுவதிகள் மட்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
- நாடக செயலமர்வின் இறுதியில் குறுநாடக போட்டித் தொடரினை ஒழுங்கமைக்கப்படுவதால் குழுக்களாக தோற்றுதல் வேண்டும். (குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 15 இற்கு மேற்படுதலாகாது)
- இளைஞர் சங்கங்களின் அங்கத்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- பங்கிற்கு பொறுப்பான பாதிரியார்கள் மற்றும் மறை மாவட்டத்தின் இளைஞர் அலுவல்களுக்கு பொறுப்பான பாதிரியாரின் பரிந்துரைகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
- பாடசாலை மட்டத்தில் தோற்றுவதாயின் அதிபர் அவர்களின் பரிந்துரையுடன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மேற்படி நிபந்னைகளின் படி குழுத் தலைவரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் தாமாகவே தயாரித்துக் கொண்ட விண்ணப்பப்படிவங்களை 2014 ஒக்டோபர் மாதம் 31ந் திகதிக்கு முன்னர் **பணிப்பாளர், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், 155/10, கொழும்பு 08** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டு வந்து கையளிக்கலாம்.

## 2ம் பக்கம் – பணிவாழ்வில் ஆண்டு...

இன்றுவரை கருதப்படுகின்றது. இப்போதும் பல அருட்தந்தையர்கள், எமது அருட்தந்தையின் அழைப்பின் பெயரில் இங்கு வந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தார்கள். அத்தோடு "மித்துரு செவன" என்றழைக்கப்படும் இச் சிற்றாலயம் புனித ஜோசப்வாஸ் அடிகளாருக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் கொழும்பு - 15ல் பணிபுரிந்த வேளையில், கொழும்பு - வடக்கில் புறக்கணிக்கப்பட்ட சேரிப்பகுதிகளில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து ஆயனில்லாத மந்தைகளைப்போல் கைவிடப்பட்டிருந்த மக்களை தேடிச் சென்று அவர்களுக்கு இறைவனைப் பற்றிப் போதித்ததுடன், அக்குடும்பங்களுக்கு பல வகையான உதவிகளை வழங்கியதுடன் நில்லாமல், அவர்களுக்கு முறையாக தேவதிரவிய அனுமானங்களை பெற்றுக் கொடுத்ததன் மூலம் 250 குடும்பங்களை புதிதாக புனித. ஜேம்ஸ் ஆலயத்திற்கு பங்கு மக்களாக அழைத்து வந்தார்.

நீண்டகாலமாக தமிழ்த்திருப்பலி இல்லாத குறையை இவர் தீர்த்த பொழுதிலும், மோதரை பகுதி ஏனைய ஆலயங்களில் தமிழ்த்திருப்பலி இடம்பெறவில்லை. ஆயினும், அருட்தந்தை பிரகா' அவர்களின் அரிய முயற்சியினால் டிலாசால் சிற்றாலயத்தில் ஏழு வருடங்களிற்கு முன்பிலிருந்து இன்றுவரை ஞாயிறு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகின்றது. இதன்விளைவாகவே "மோதர" பகுதியில் கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்பிலிருந்து புனித ஜோன்ஸ் பேராலயத்தில் ஞாயிறு திருப்பலி தமிழில் ஒப்புக் கொடுக்கப்பட்டுவருகின்றது. இவர் சகோதர மொழியை சேர்ந்தவரான போதிலும், தமிழ் மக்களை தன்தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று அரவணைத்துக் காத்தமை எம் பாக்கியமே. மேலும் பல குடும்பங்களிற்கு இக்கட்டான வேளையிலும், அவர்களின் குழந்தைகளது கல்விக்கான உதவிகளையும் இன்றும் வழங்கி வருகின்றார்.

அதேபோன்று பாடசாலைப் பருவத்திலிருந்து இன்று பட்டதாரிக் கல்வியை நிறைவேற்றிய வேளையிலும் கூட என்னைப் போன்ற ஒரு சில இளைஞர்களுக்கும், பிள்ளைகளுக்கும் அருட்தந்தையின் நிழலும், அரவணைப்பும் கிடைக்கப் பெற்றமை எமது பாக்கியமே. தற்போது 80 வயதை அடைந்து வயோதிபத்தின் பல அசௌகரியங்களையும், சிரமங்களையும் சுமந்துகொண்டு, தனது சுகத்தைப் பாராது கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திற்கு கிழமையில் நான்கு தடவை பாவசங்கீர்த்தன கடமைகளை நிறைவேற்றவும், மேலும் "சாந்திநிவஸ" மடத்திற்கு தேவைப்படும் பொழுதிலும், அதனைத்தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிறு திருப்பலியினை அன்னை தெரேசா மடத்திலும் நிறைவேற்றிவருகின்றார்.

அத்துடன் கடந்த 25 ஆண்டுகளாக டிலாசல் அருட் சகோதரர் இல்லத்திற்கு றொனால்ட் அடிகளாரினாலே காலைத் திருப்பலி நிறைவேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் கடந்த 3வருடமாக கொழும்பு - 15ல் உள்ள அருட்சகோதரிகள் மடத்திற்கு பாவ சங்கீர்த்தன கடமைகளை நிறைவேற்றியும், வேண்டுகோளின் பேரில் ஏனைய வயோதிப வீடுகளிற்கு சென்று திவ்விய நற்கருணை வழங்குவதையும் தன்தலையாய கடமையாக கொண்டுள்ளார். எப்போதும் தன்னை சிறிய மட்டங்களுடனான பணியில் ஈடுபடுத்தியதுடன், மக்களை தேடி தானாகவே செல்வதைவழக்கமாகக் கொண்ட -வருமாவார். இவர் எப்பொழுதும் ஏழைகளுக்கும், நலிந்தோருக்கும், கவனியாது விடப்பட்டவர்களுக்காகவும் தன்னை அர்ப்பணிப்பதுடன் அவர்களுக்காக எந்நேரமும் தயாராகவும் உள்ளார். அதன் மூலம் "இயேசுவின் பணியாளனாகத் தன்னையும் அர்ப்பணித்து இறைவனின் இல்லமும் உள்ளமும் அனைவருக்கானது என்பதனை தனது எளிய வாழ்வின் மூலம் தெளிவாக காட்டி நிற்கின்றார்". மேலும் இவரும், இவரது பணிவாழ்வும், பலர் இறைபணியாற்றவும், குருத்துவ வாழ்வில் இணையவும் தூண்டுகோளாக அமைந்தது.

அர்ப்பணிப்பிற்கும், சீடத்துவ வாழ்விற்குமான மிகச் சரியான பாதையில் அயராது நின்ற, இன்றும் நிற்கும் இயேசுவின் உண்மைச் சீடனான அருட்தந்தை றொனால்ட் டி சில்வா அவர்களின் உடல் மற்றும் ஆன்மீக நலனிற்காக தொடர்ந்தும் பிரார்த்திக்க உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

## நன்றியோடு நினைக்கின்றோம்



திரு. அந்தோனி சிலுவை பர்ணாந்து
17 - 09 - 1917 - 12 - 10 - 1988

திருமதி. சூசையம்மாள் பர்ணாந்து
15 - 05 - 1927 - 19 - 08 - 1989



திருமதி. சூசை திரேசா பர்ணாந்து
03 - 02 - 1964 - 02 - 10 - 2013

பத்து மாதம் அன்புடனே சுமந்து
என்னை பாரினிலே தவள விட்டவள்
மனிதத்தில் பேதங்கள் ஏற்படலாம்
உன் சேவையிலோ பேதமில்லை
இரத்தத்தில் கூட பிரிவுகள் வரலாம்
உன் அன்பில் பிரிவுகளில்லை

உண்மையான அன்பின் சிகரம் நீ - உறவுகளை
மதிக்க நல்ல உதாரணமும் நீயே! என் அன்பு அம்மா...
என்னை நடக்க வைத்து பார்க்க வேண்டும்
என்ற ஆசையை விட - நான் விழுந்து விட
கூடாதென்ற நினைப்பிலிருந்ததுன் - தாய்ப்பாசம்
நீ மடிந்தாலும் என்றும் என்னுடனிருக்கும் உன் வாசம் ....

(N3713)

## திருமண சேவை

### மணமகன் தேவை



பாலர் பாடசாலையில் தொழில்புரியும் 34 வயதுடைய ஆசிரியைக்கு படித்த, தொழில்புரியும், நல்ல குடும்பத்தில் ஒரு றோமன் கத்தோலிக்க மணமகனை எதிர்பார்க்கின்றோம்.
0112948673,0775166059

**இல N3464 கத்தோலிக்க அச்சகம் கொழும்பு - 08.**

## 06ம் பக்கம் – முதியோரைப் போற்றுவோம் ...

இறைவா! நீர் எனக்கு மாபெரும் கொடையாகத் தந்துள்ள என் பெற்றோருக்காக உம்மைப் போற்றுகின்றேன். குழந்தைப் பருவத்திலிருந்து என்னை வளர்த்து உருவாக்க என் பெற்றோர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். என்மீது அவர்கள் பொழிந்த நிபந்தனையற்ற அன்புக்காகவும், என் குற்றங்களை எல்லாம் மன்னித்து என்னை ஏற்றுக் கொண்டதற்காகவும் நன்றி கூறுகின்றேன். அவர்களின் மனதை நோகச் செய்ததற்காக, அவர்களுக்கு நன்றி பாராட்ட மறந்ததிற்காக மனம் வருந்துகின்றேன். இறைவா என் பெற்றோரை ஆசீர்வதியும். என் வாழ்விலும், பணியிலும் என் பெற்றோரை நான் பெருமைப்படுத்த அருள்தாரும். என் பெற்றோருக்காக மட்டுமல்ல உலகின் அனைத்துப் பெற்றோரையும் நினைவுகூர்ந்து மன்றாடுகின்றேன். தம் பிள்ளைகளால் ஒதுக்கப்பட்டு தனிமையில், முதியோர் இல்லங்களில் வாழும் பெற்றோரை நினைவுகூர்ந்து மன்றாடுகிறேன். **"தாய் தந்தையரை மதித்துப் போற்று"** எனும் உம் கட்டளையை எல்லோரும் நிறைவேற்றுவார்களாக.

## விடுகதையின் விடைகள்

| | |
|---|---|
| 1 கிளி | 2. ஆப்பிள் |
| 3. இளநீர் | 4. கதிரை |
| 5. பந்து | 6. காற்று |
| 7. பென்சில் | 8. உலகம் |
| 9. முட்டை | 10. கண் |

## 04ம் பக்கம் – தினந்தோறும் செபமாலை ...

அன்னை மரியாவின் வாழ்வோடு பணியோடு இணைந்தது. அதனால்தான் ஒரு ஊரிலே பல கிறிஸ்தவ கோயில்கள் இருந்தாலும், கத்தோலிக்க ஆலயத்தை மாதா கோயில் என்று அழைக்கின்றோம். தாயின் மீது உள்ள அன்பையும், மரியாதையையும் காட்டதான் அவருக்கு கோயில்கள், நவநாட்கள் செபங்கள், திருவிழாக்கள் என்பன எல்லாம் நடக்கின்றன. இவைகளில் எல்லோராலும் விரும்பி அடிக்கடி தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் சொல்லுகின்ற செபம்தான் செபமாலை. இந்த செபமாலை பொருள் உணர்ந்து விவிலியத்தோடு இணைந்து செபிக்கவேண்டும். அப்போது இறைவனின் பிரசன்னத்தை உணர முடிகிறது. இதன் வழி அவரது அருளையும், ஆறுதலையும் நாம் பெறுகின்றோம். ஆகவே தினமும் செபமாலையை செபிப்போம். அன்னை மரியாவோடு இணைந்து இறைவனின் திருப்பாதத்தை அடைவோம்.

## 13ம் பக்கம் – இளைஞர்களின் வழிகாட்டி...

நல்வாழ்க்கை வாழ்ந்த தோபியா தன்னுடைய தந்தையைவிட 5 ஆண்டுகள் அதிகம் வாழ்ந்து மரித்தார். நூலின் ஆசிரியர் இதன் பிறகு "நினிவே" குறித்த தோபித்துவின் இறைவாக்கு (14:4, 15) எப்படி நிறைவேறியது எனக் காட்டுகின்றார்.

### முடிவாக சில வார்த்தைகள்....

'தோபியா' என்ற இளைஞன் தன் தாய் தந்தைக்கு ஏற்ற மகனாக வாழ்ந்தார். நல்வாழ்க்கையை, நல் மதிப்பீடுகளை, உயரிய சமய நெறிகளை, சமுதாயத்தில் நம்பிக்கைக்கு உரியவராக வாழும் வழி முறைகளைப் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்டார்.

நல்ல நண்பரின் துணைகொண்டு (வானதூதர் இரபேல்) இழந்துபோனதை மீட்டு, தந்தையின் வாழ்க்கைக்கு மீண்டும் ஒளியேற்றினார். மகிழ்ச்சி வாழ்வை மீண்டும் பெற்றுத்தர நீண்ட தூரம் பயணம் மேற்கொண்டார். அதில் வெற்றியும் பெற்றார். அவமானத்தின் சின்னமாக நின்ற சாராவின் வாழ்வில் புதிய ஒளியேற்றி நல்ல குடும்ப வாழ்வை உருவாக்கினார். தன் பெற்றோருடன் வாழும்போது தன் தந்தை தாயை அன்பு செய்தும், மிக மரியாதைக்குரிய விதத்தில் போற்றி வாழ்ந்தார்.

தன் பெற்றோரின் இறப்புக்குப் பிறகு மேதியா நாட்டில் வாழ்ந்து வந்த தன் மனைவி சாராவின் பெற்றோரிடம் சென்று, அவர்களை மதிப்புக்குரிய, மரியாதைக்குரிய விதத்தில் பேணிக் காத்தார். அவர்களின் இறப்புக்குப் பிறகு சமுதாயத்தில் "மக்களின் மதிப்புக்குரியவராக வாழ்ந்தார்..." இப்படி பல்வேறு நிலைகளில் எடுத்துக்காட்டாகத் திகழும் 'தோபியா' இளைஞர்களுக்கான சிறந்த வழிகாட்டும் தலைவரல்லவா? இவரின் அடிச்சுவட்டில் நடக்கும் இளையோர் ஆண்டவரின் ஆசியையும், வழிநடத்துதலையும் காண்பார்கள்.

தோபியா போன்று விவிலியத்தில் வரும் கதாப்பாத்திரங்களின் - நீதித்தலைவர்கள், இறைவாக்கினர்கள், திருத்தூதர்கள், ஆகியோரின் வழியில் இளையோரே, உங்களின் ஆன்மீக வழித்தடங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். அப்பொழுது பாதை தவறிப் போவோருக்கு பாதையாக மாற முடியும். நம்பிக்கை இழந்தோருக்கு நம்பிக்கையாக மாற முடியும். ஒழுக்கம் இழந்தோருக்கு புதிய இறை அனுபவத்தின் அடிப்படையில் இறை ஒழுக்கத்தைக் கற்றுத்தர முடியும்.

இன்றை இளைஞர்களே! நீங்கள் நாளைய உலகின் எதிர்காலம் என்ற உண்மையை அறிந்து ஏற்றுக்கொள்ளுங்கள். இதனை உணர்ந்து செயல்பட்டால், ஒட்டுமொத்த உருவாக்கத்திற்கு உதவிடும் ஆன்மீக வழிகளைக் கண்டுகொள்ள முடியும். இளைஞர்களே உங்கள் இதயத்தை திறந்த வைத்து நம்பிக்கையுடன் பயணம் செய்யுங்கள். சமுதாயத்தின் தீமைகளை மாற்றிட இயேசுவின் இறையாட்சி வழியில் இணைந்து செயல்படுங்கள். அப்போது இன்வரும் காலம் இளைஞரின் காலமாய் உதயமாகும். முற்றும்.

## கத்தோலிக்க திருமறை தரம் (11) (க.பொ.த) மாணவர்களுக்கான மாதிரி வினாக்களுக்கான விடைகள்

1. அ. 1651ஆம் ஆண்டு, இந்தியாவில் பிறந்தார்.
   ஆ. - சுற்று மடல்களை வெளியிட்டுள்ளார்.
   - அப்போஸ்தலிக்க அறிவுரைகளை வெளியிட்டுள்ளார்.
   - மறையுரைகளையும், கடிதங்களையும் வெளியிட்டுள்ளார்.
   - மேற்கு, கிழக்கு ஜேர்மனியை ஒன்றுபடுத்தினார்.
   - அநீதிகளுக்காக கோஷமிட்டுப் பேசினார்.
   - மக்களுக்கு உதவினார்.
   இ. பத்திரிகை வெளியிடல், பிறருக்காக தன்னுயிரை கொடுக்க முன்வருதல், சிறையிலடைக்கப்பட்டபோது பாதுகாக்கப்பட்டமை.
2. அ. புனித பவுல்
   ஆ. குருத்துவம், மெய்விவாகம்
   இ. தமது பிள்ளைகளுக்கு திருமுழுக்கு கொடுப்பதன் மூலம் திருச்சபையின் அங்கத்தவராக பிள்ளைகளை வளர்த்தல், செபம் மறையுண்மைகள், உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு வாழ்வது பற்றி கல்வியூட்டல், குடும்பமாக இறைவனுக்கு நன்றிச் செபம் செலுத்தும் வகையில் பிள்ளைகளை இறைவனுடன் உரையாட வைத்தல், பிள்ளைகளுக்குத் தேவையான கல்வியறிவு, ஒழுக்கம் என்பவற்றைக் கற்பித்தல், பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டுதல்.
3. அ. திருமுழுக்கு
   ஆ. திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை
   இ. பாவங்களை நினைத்தல், பாவங்களுக்காக மனம் வருந்துதல், இனிமேல் பாவம் செய்யமாட்டேன் என உறுதி கொள்ளல், குருவானவரிடம் பாவங்களை அறிக்கையிடல், பரிகாரத் தண்டனையை நிறைவேற்றுதல்.
4. அ. பாடுகள், மரணம், உயிர்ப்பு
   ஆ. நன்றிப்பலி (திருப்பலி), திருவருட்சாதனம், திருச்சபையின் பொதுச்செபம்
   இ. இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த நாள், தூய ஆவி திருச்சபை மீது இறங்கி வந்தது ஞாயிறு தினமாகும், இறைவனிடம் இருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறும் நாள், ஓய்வு நாளை அனுசரிப்பதன் மூலம் அன்று சிலுவையில் இயேசு செய்த தியாகத்தைப் புதுப்பிக்கின்றோம், இறை உடன்படிக்கையில் பங்கு கொள்கின்றோம்.
5. அ. நல்ல சமாரியன்
   ஆ. குடும்ப வாழ்வு, சமய வாழ்வு, குருத்துவ வாழ்வு
   இ. எல்லா மனிதருக்கும் மதிப்பளியுங்கள், அனைவரையும் அன்பு செய்யுங்கள், பிறரை வெறுக்காதீர்கள், பொறாமைப்படாதீர்கள், உம்மை அன்பு செய்பவர்களுக்கு மட்டுமல்ல வெறுப்பவர்களையும் அன்பு செய்யுங்கள், பிறரின் தேவைகளை அறிந்து உதவி செய்யுங்கள்.
6. அ. புனித கிறிஸ்தோஸ்தம் அருளப்பர்
   ஆ. நேர்மையான வழியில் உழைத்தலின் மூலம், விலை கொடுத்து வாங்குதலின் மூலம், பண்டங்களை மாற்றி அதற்கு ஈடான பண்டங்களைப் பெறுவதன் மூலம், நன்கொடை மூலம், பரம்பரைச் சொத்துக்கள் மூலம்.
   இ. உங்கள் பாடப்புத்தகத்தில் பார்க்கவும்.

# Papal Visit Sri Lanka - 2015

Finance Committee - c/o Aquinas University College
990, Gnanartha Pradeepaya Mw, Colombo 8; Sri Lanka.
✆ +94 11 5929997 e-mail: fcsecretariat2014@gmail.com

September 22, 2014

To: All Priests, Religious and Faithful,

## Papal Visit - Promotional Items

As you are aware, we are now in the process of preparing for the much awaited visit of our Holy Father Pope Francis, in January 2015. Even though the Government is assisting us in many ways, we have to bear a heavy financial burden to finalize the preparations that require to be made by the Catholic Church. Donations and contributions received from Well Wishers are our main source of funding, which leaves us with a deficit that needs to be bridged through the sale of Flags, Calendars and Memorabilia described in the leaflet / catalogue attached herein.

The official Logo designed and registered for the occasion, and which can only be used by the Church, is incorporated in all these exclusive items - some of which are of very high quality, but offered to you at a very low price. taking into consideration the day-to-day commitments of the Laity.

We therefore, look forward to your invaluable support to generate funds through the sale of these products, and the support given by you would be your generous contribution towards our efforts. Please extend your fullest co-operation to the Members of the Merchandise / Mementos Committee who would carry a letter of authority from the Chairman, Finance Committee or Secretary, Finance Committee. Furthermore, we also trust you would help ensure that the items on offer are not duplicated and / or the Logo is not used by any other party because, only the Merchandise / Mementos Committee headed by Mr. Nelu Fernando has been granted permission to do so by the Church.

May all your endeavours receive God's blessing in abundance !

Yours devotedly in Christ,

✠ Malcolm Cardinal Ranjith
Archbishop of Colombo/ Chairman - Finance Committee




Chairman
His Eminence Malcolm Cardinal Ranjith

Vice Chairman
Mr. B R Luxman Fernando
✆ 077-744 8854

Secretary
Very Rev. Fr. Placidus de Silva
✆ 071-473 9304

Assistant Secretary
Mrs. Srimala de Silva Hewavitharana
✆ 011-592 9997, 077-417 9463

Joint Treasurer
Mrs. Pamela Cooray
✆ 077-731 8682

Joint Treasurer
Mrs. Nilima Casie Chetty
✆ 077-303 0808

Authorized agents are:

**Colombo Catholic Bookshop**
No. 2, Gnanarthapradeepaya Mawatha,
Colombo 8.
*Tel : 011 4373869*

**Nelu's Advertising Services Pvt Ltd.**
188, High Level Road, Nugegoda.
Phone : 2852820

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
# உங்களுக்கான பல விசேட சேவைகள்!

## கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

**ஞான ஒளி பத்திரிகையின்**
**விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்**

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 7750/= 15500/= 31000/= | 7000/= 14000/= 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 11500/= 23000/= 46000/= | 10000/= 20000= 40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.


| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 7750/= 15500/= 31000/= | 7000/= 14000/= 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 11500/= 23000/= 46000/= | 10000/= 20000= 40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.


## தொடர்புகளுக்கு

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02,
ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984,
0112678106, 0114614927
பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.lk


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்